வேறு.

கல்லுங்கயவோர்மனமேயவர்தங்
கண்ணேமரமுமவர்தண்மையறச்
சொல்லும்முறையேசுடுதியிடர்சேர்
சுருவளிமற்றவர்தந்தொழிலே. (ரு)

செயிரைச்சுடவல்லவர்தம்மளவுஞ்
செயிர்செய்பவர்சேர்வுறுதீவனமீ
துயிரைச்சுடவல்லதுவெவ்வழலோ
வோராவிவர்தம்முறையன்றியுமே. (சு)

வேறு.

வெருவவெரிசொரியும்விழியுமழல்பொழியுமால்
வெகுளியெரிவிரவிமிகமிகவுமெரியுமா
லருவவுயிருமிறவெரியுமனலதனில்வே
றனலுமிலதகிலவுலகதனினழலதே. (ரு)

தருவதருவதிலவொனநினையுமனமொடே
தமதுதலைமைகெடவவரவர்கள்கடையிலே
யொருவர்தருமுணவுகருதியுழல்பவையில்வே
றழலுமலிகளுமுளவுமலவுணரிலே. (சு)

வேறு.

அணிகொளும்பர்தருவுநேருகர்பிண்டிமரமுநேர்
கணிகபங்கரரசுநேர்கடியகானமதனிலே. (எ)

வேறு.

நீனத்திற்சோலையாய்நெடுந்தாபத்தா
னிழலெனவந்தடைந்தவர்க்குநெருப்பேயாகி
வாளொத்தமுட்சரித்துவறிதேகாய்க்கும்
வன்பாகுங்கருவேலைவளர்க்குங்கானம். (அ)

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-முத்துராமலிங்கசுவாமிகள்

அருளிச்செய்த

சுவாநுபவத்திருவாக்கியங்கள்.

சொரூபாநுசந்தான நாமங்கள்.

இவை

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஷை சுவாமிகளின் ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

பலபிரதிருபங்களைக்கொண்டு ஒருவாறாராய்ந்து

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

விய ௵ சித்திரை ௴

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சுவானுபவத்திருவாக்கியங்கள்.

சர்வம்பஞ்சபூதமயம். (௧)

சர்வம்மித்தை. (௨)

சர்வஞ்சின்மயம். (௩)

நாமரூபநாடாமல்வெகிர்முகமன்னியிலிருக்கிறது.

பரிபூரணமாகியதனக்கு என்னவேண்டுவது. (௫)

எல்லாந்தோற்றமாத்திரம். (௬)

அதிட்டானமாகிய தானாய்ப்பார்க்கும்போது நானவனெங்கே. (௭)

உபசாந்தமுந்துரியம். அறியாதவிடையமுந்துரியம். (௮)

பாசபந்தம் வரும்போது பாசநிவிர்த்தியுந்தோன்ற வேண்டும். (௯)

சுகதுக்கமுள்ளவரையில் தாரதன்மியநீங்காது (௧௦)

பிரபஞ்சமித்தையாபாவனையினாலுந் தன்மயபாவனையினாலுங் காண்பான் காட்சிநீங்கும். (௧௧)

எல்லாவற்றையுந் தானறியப்பட்டதாயுந் தன்னை யொன்றினாலு மறியப்படாததாயு மிப்படிக்காண்கிறதே பிரத்தியட்சஞானம், (௧௨)

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சுவானுபவத்திருவாக்கியங்கள்.

சர்வம்பஞ்சபூதமயம். (௧)

சர்வம்மித்தை. (௨)

சர்வஞ்சின்மயம். (௩)

நாமரூபநாடாமல்வெகிர்முகமன்னியிலிருக்கிறது.

பரிபூரணமாகியதனக்கு என்னவேண்டுவது. (௫)

எல்லாந்தோற்றமாத்திரம். (௬)

அதிட்டானமாகிய தானாய்ப்பார்க்கும்போது நானாவனெங்கே. (௭)

உபசாந்தமுந்துரியம். அறியாதவிடையமுந்துரியம். (௮)

பாசபந்தம் வரும்போது பாசநிவிர்த்தியுந்தோன்ற வேண்டும். (௯)

சுகதுக்கமுள்ளவரையில் தாரதன்மியநீங்காது (௧௦)

பிரபஞ்சமித்தையாபாவனையினாலுந் தன்மயபாவனையினாலுங் காண்பான் காட்சிநீங்கும். (௧௧)

எல்லாவற்றையுந் தானறியப்பட்டதாயுந் தன்னை யொன்றினாலுமறியப்படாததாயு மிப்படிக்காண்கிறதே பிரத்தியட்ச ஞானம், (௧௨)

தன்னிடத்தி லகங்காரம்-பிராந்தி மூலப்பிரமை. ( )

இங்கும் அங்கும் ராகத்துவேஷமன்னியிலிருக்கால் இரண்டுக்கு மைக்கியம். (கச)

பிரத்தியட்சமானவிடையமு மப்பிரத்தியட்சமான விடையமுந் திருக்குவாகிய ஞானத்துக்குத் திரிசியம். (கரு)

வஸ்துநிர்ணயத்தில் பிரபஞ்சந் தானல்லவென்றும் அத்துவிதத்தில் தன்னைத்தவிர வேறில்லாதபடியினாலே தானென்றும். (கசு)

சோகமடைகிறதினாலே துக்கம். மோகத்தினாலே சுகம். (கஎ)

இத்தனையுமாயாமயமலவோ வுள்ளபடிமுடியும். ( )

திரிசியந்திருக்குவையன்றியில் தோன்றாது. (கக)

அதிட்டானத்தைத்தவிர வாரோபத்துக்குவடிவாயில்லாதபடியினாலேயெல்லாமதிட்டானமயந்தான்

இந்திரசாலக்காரனிடத்தில் கந்தருவபுரந்தோன்றி நில்லாம லழிந்துபோவதுபோலத் தன்னிடத்தி லுண்டாகாநின்ற சங்கற்பமெவ்வளவோ அநேகமாய்வந்து மொன்று நிற்கவில்லை. (உக)

உபசாந்தமானாலுந் தன்மயமானாலுஞ் சகலத்தியாகந்தான். (உஉ)

நிவிர்த்தியாயிருக்கவேண்டும்-அல்லது, நாமரூபநா
ட்டம்வந்தால் அத்துவிதமாயிருக்கவேண்டும்.()

தன்னைச்சேவையாகக் காணுகிறதே பிறவி-தன்
னைச்சிவரூபமாய்க்காணுகிறதே மோட்சம்.(௨௪)

சகலகலைக்ஞானவல்லவாருக்கும் நிராசைவேண்டு
வதுதான். (௨௫)

எல்லாஞ்சிவன் செயல்தான். (௨௬)

எல்லாஞ்சிவாகாரந்தான். (௨௭)

இம்முறையிலேதான் உயர்வு தாழ்வான தாரதன்மிய
ங்கள். (௨௮)

பொறுதியிலே சமாட்சிதான். (௨௯)

உபசாந்தத்தில் சச்சிதானந்த மூன்று மனுபவமாய்
க்காணவேண்டும். (௩௦)

பிரபஞ்சத்தில் சொல்லப்பட்ட பேதங்களெல்லா
ஞ்சிற்றறிவிலேதா னென்றறியவேண்டும். (௩௧)

எல்லா முன்னுடைய செயலேயாளுங் கொடுத்த
தார் வாங்கினதார். (௩௨)

சதானந்த சொரூபமே. யானென்கிறதையிச்சிப்
பே னென்னதுயிகழ்வே னென்பதின்மை, இதில்
யாருக்கும் நம்பிக்கை வரவேண்டுவதுதான். ()

தேகோக புத்தியினாலே யருந்தவிதத்தாலே பொருந்
தவிதத்தாலே சகல ஆசையும் வந்தது. (௩௪)

தன்னிடத்தி லகங்காரம்-பிராந்தி மூலப்பிரமை.( )

இங்கும் அங்கும் ராகத்திவேஷமன்னியிலிருந்தால் இரண்டுக்கு மைக்கியம். (௧௪)

பிரத்தியட்சமானவிடையமு மப்பிரத்தியட்சமான விடையமுந் திருக்குவாகிய ஞானத்துக்குத் திரிசியம். (௧௫)

வஸ்துநிர்ணயத்தில் பிரபஞ்சந் தானல்லவென்றும் அத்துவிதத்தில் தன்னைத்தவிர வேறில்லாதபடியினாலே தானென்றும். (௧௬)

சோகமடைகிறதினாலே துக்கம்.மோகத்தினாலே சுகம். (௧௭)

இத்தனையுமாயாமயமலவோ வுள்ளபடிமுடியும். ( )

திரிசியந்திருக்குவையன்றியில் தோன்றாது. (௧௯)

அதிட்டானத்தைத்தவிர் வாரோபத்துக்குவடிவமில்லாதபடியினாலேயெல்லாமதிட்டானமயந்தான்

இந்திரசாலக்காரனிடத்தில் கந்தருவபுரந்தோன்றி நில்லாம லழிந்துபோவதுபோலத் தன்னிடத்தி லுண்டாகாநின்ற சங்கற்பமெவ்வளவோ அனேகமாய்வந்து மொன்று நிற்கவில்லை. (௨௧)

உபசாந்தமானாலுந் தன்மயமானாலுஞ் சகலத்தியாகந்தான். (௨௨)

நிவிர்த்தியாயிருக்கவேண்டும்-அல்லது, நாமரூபநாட்டம்வந்தால் அத்துவிதமாயிருக்கவேண்டும்.()

தன்னைச்சிவபாவனையாகக் காணுகிறதேபிறவி-தன்னைச்சிவரூபமாய்க்காணுகிறதேமோட்சம்.(௨௪)

சகலகலைக்ஞானவல்லவாளுக்கும் நிராசைவேண்டுவதுதான். (௨௫)

எல்லாஞ்சிவன்செயல்தான். (௨௬)

எல்லாஞ்சிவாகாரந்தான். (௨௭)

சிற்றறிவிலேதான் உயர்வு தாழ்வான தாரதன்மியங்கள். (௨௮)

பேரறிவிலே சமசாட்சிதான். (௨௯)

உபசாந்தத்தில் சச்சிதானந்த மூன்று மனுபவமாய்க்காணவேண்டும். (௩௦)

பிரபஞ்சத்தில் சொல்லப்பட்ட பேதங்களெல்லாஞ்சிற்றறிவிலேதானென்றறியவேண்டும். (௩௧)

எல்லா முன்னுடைய செயலேயானால் கொடுத்ததார் வாங்கினதார். (௩௨)

ஈதனைத்துஞ் சொரூபமே. யானிங்கெத்தையிச்சிப்பேனெதையிகழ்வேனெனல்பற்றின்மை, இதில் யாருக்கும் நம்பிக்கை வரவேண்டுவதுதான். ()

தேகோக புத்தியினாலே யருந்தவிதனாலே பொருந்தவிதனாலே சகல ஆசையும் வந்தது. (௩௪)

நிருவிகற்பசமாதியில் என்ன தோற்றம் வந்தாலுந்
தன்னைத்திருக்காகவே காணவேண்டுமது தான் ( )

பிரபஞ்சத்தில் பஞ்சவிடையசுகத்திற் பொருந்தும்
போது பிரியமாயிருக்கும், பிற்பாடு தனக்குத்தா
னே வெறுப்புக்காணுமிதுபோலே தன் சொருப
சுகத்திலும் பொருந்தும்போதும் பிரியம் வரும்
எத்தனைநாளிருந்தாலும் பிரியம் வாங்காது. ( )

சமுத்திரத்தில் முன்வந்த அலைபோய்ப் பின்னலைவ
ருகிறதற்குமுன்னாலே சமுத்திரமாத்திர மிருந்த
துபோலத்தன்னிடத்திலு முன்னாலே வந்த கட
டநினைவுபோய்ப் பின்னாலே வருகிற நினைவுக்கு
முன் தானிருந்தது, இதனாலே பிரபஞ்ச மசத்
துத், தான் சத்து, தன்னை யனுபவிக்கிறது மிந்த
நிலைதான். (௧௭)

பூமியிலுண்டான வஸ்துக்களைக்கற்பிதமென்றுந் த
ன்மயமென்றுஞ்சொல்லலாமிதுபோலசிதாகாச
த்துக்குமேலில்லாதபடியினாலே அதிலுண்டான
வைகளைக் கற்பிதமென்றுந் தன்மய மென்றுஞ்
சொல்லலாம். (௧௮)

வகையாகக்கண்டுமயங்காமல் தொகையாகக்கண்டு
சும்மாயிருக்கவேண்டும். (௧௯)

சாதுசங்கமே சகலசன்மார்க்கத்துக்குமேது. (௨௦)

உபசாந்தத்திற்காரணமான காட்சியில்லை. (௨௧)

மேல்கனவுபோல இராநின்ற துரியநிலையில் சர்வ
துக்கநிவிர்த்தி. (சஉ)

உற்றவாறெதுவருமதுவருக. (சங)

எல்லாங்கதைதான். (சச)

எல்லாம்புலப்பந்தான். (சரு)

பிறர்குற்றத்தைத் தாறுகவெண்ணிக்கொண்டு தன்
குற்றத்தை விசாரிக்கவேண்டும். (சசா)

சிற்றறிவாகிய சீவவறிவே யெல்லாவற்றிற்கு மூ
லம். (சஎ)

மனதுமுதலாகிய பிரபஞ்சவியல்புகளூ, மேகாடம்
பரந்தான். (சஅ)

ஞானநாட்டத்திலே சிரத்தையும் பிரபஞ்சநாட்ட
த்திலே யசிரத்தையும். (சகூ)

தத்துவாதத்துவவிசாரம்பண்ணி அதத்துவத்தைத்
தள்ளித் தத்துவத்தைத் தாறுகக்கண்டு சந்தேக
விபரீதமறவிருக்கவேண்டும். (ரு0)

செனனமரணமு நினைவுமாத்திரம். (ருக)

நாமரூபமாய் நாடுகிறதைத்தள்ளி சொரூபமாக நா
டுகிறதே சமநிலை. (ருஉ)

குருவாக்கியத்தில் சந்தேகவிபரீதமன்னியிலிருக்கி
றது மெய்ப்புருட வருத்தம். (ருங)

தன் சுபாவநிலையில் நினைவுக்கு நித்தியத்துவம் இல்லாததனுலே பிரபஞ்ச மித்தைதான். (ருச)

அதிட்டானக்ஞான நிலைமையுள்ளவர்களுக்கு எல்லாமாகிய அத்துவிதஞானமும் வரும். (ருரு)

பற்றின்மையாகிய துரியநிலைமை யுள்ளவர்களுக்கு போனகாரியத்திலும் வருகிறகாரியத்திலும் நினைவுதோன்றுமலிருந்தால் சாட்சாத்காரந்தான். ()

தான் சித்துரூபனென்கின்ற புத்தி வாங்காமலிருந்தால் நானீயென்கின்ற பேதமாகிய அஞ்ஞான நீக்கம் வரும். (ருஎ)

நிகழ்காலமாகிய எதிர்காலத்தில் செய்காரியங்களில் பின்வருத்தமுஞ் சௌக்கியமு மறிந்து செய்ய வேண்டும். (ருஅ)

அக்கினியில் எவ்வளவு பொறிகிளம்பினுலும் அக்கினிக்கு லயமில்லாததுபோலப்பூரணமான தன்னிடத்தில் தேகாதிமுதலாய வாழ்ந்தாயுந் தாழ்ந்தாயுமென்னநினைவு வந்தாலுங் கற்பிதம்-தான் நித்தியம். (ருசூ)

எல்லாமானதாகத்தன்னையறிந்தால் ஈதலுமிரக்கமும் வரும், ராகத்திவேஷம் வாராது. (சுo)

தன்னிடத்தில் பெருமைசிறுமை பகையுறவு சுகதுக்கமாய்வருகிற சங்கற்பம், கற்பிதம். ஆரோபம். அத்தியாசந்தான். (சுக)

சரீரமுதலான பிரபஞ்சங்காலத்தில் உட்பட்ட படியினாலே அதினிடமாய் வாராநின்ற உயர்வு தாழ்வு வருத்தங்களுக்குப்பிரமாணமில்லை. (௬௨)

பிரபஞ்சத்தில் விவேகத்தினாலே குணத்தைப் பொருளாய்க்கொள்ளாமல் குற்றமேகாணவேண்டும்.

ஒன்றிலேதோன்றியனைத்துருவமானவுணர்வுக்குப் பகையுறவென்றுரைப்பதெங்கே. (௬௪)

சித்துரூபனென்கின்றபுத்திமறந்தால் உடனேவிட்சேபமும் விபரீதமும் வரும். (௬௫)

சுவரிடத்திலுண்டான சித்திரம் வத்துவாகாது, இதுபோலத் தன்னிடத்திலுண்டான சர்ப்பமுதலானது வத்துவாகாது. (௬௬)

தன்னைப் பஞ்சகிர்த்தியனுடையவனாகக் கண்டால் செனனமரணந்தனக்கில்லை. (௬௭)

துரியநிலையிலும் எல்லாஞ் சின்மயமென்றநிலையிலும் புத்தியழுத்தம் வேண்டும். (௬௮)

கூத்தாடியைப்போலக், கூத்துநிலையல்லப்போல, வெல்லாங்கூத்தாகக்கண்டால், தான், நித்தியந்தான். (௬௯)

பிரமாமுதற்றம்பப்பூச்சிபரியந்தம் நிலைமையில்லாதபடியினாலேதானொருவன்மாத்திரமிருக்கிறவன் இதனாலும் அத்துவிதந்தான். (௭0)

செகத்தெல்லாந் தன்னைத்தவிர இல்லாதபடியினாலே தானே யெல்லாமானதாலும் அத்துவிதந் தான். (௭௧)

சரீரமெடுத்து விசாரந் தோன்றினவைக் குள்ளாகவெகுவிதங்களாய் உக்கிரட்டமென்று சொல்லப்பட்டபேர்க ளிருக்கவில்லை ஆனதால் தேகாதி முதலானவைகளி லென்னதிரமில்லை. (௭௨)

பிரபஞ்சங் காலத்திரயத்திலு மில்லாதபடியினாலேயும் ஒருநினைவு வரும்போது ஒருநினைவு அழிந்துபோகிறபடியினாலேயுங் காணப்பட்டதெல்லா மழியப்பட்டு போகிறபடியினாலேயு மித்தையென்று சொல்லுகிறதிலே சந்தேகமில்லை. (௭௩)

திருநதித் துறைகளெல்லாந் தீம்புனல் வறந்ததேயோ. (௭௪)

அக்கினியி லுண்டாகாநின்ற பொறிக்கு அனல்காரணமானதுபோலச் சகத்துக்கு ஆத்மாவேகாரணமல்லாமல் இடையிலொன்றுஞ் சொல்லத்தக்கதில்லை. (௭௫)

பழுதையிலுண்டான பாம்பு பழுதையென்றுசொல்லலா மிதுபோலப் பிரமத்திலுண்டான சகத்துப் பிரமந்தான். (௭௬)

கர்மகர்த்தாவாய்க் காணும்போது கர்த்ததந்திரமென்றும் நித்தியமாய்ப் பூரணமாய்க் காணும்போது வத்துதந்திரம். (எஎ)

காரணகாரியமாயுள்ளதுக்கு பரிச்சின்னத்துவமுண்டு. நிஷ்காரணமாயிருக்கின்ற ஆத்மாவுக்கு அபரிச்சின்னத்துவமும் பூரணமுமுள்ளதுதான் ( )

சகலசாத்திர விசாரம்பண்ணின விசாரக்ஞானிகளுக்கு யான் எனதுமுதலான போகத்தி லாசாபாசப் பிரவிர்த்திவருகிறது பிரபஞ்சசம்பிரமாணபத்தியினாலேதான். (எ௯)

அநேக செல்வமுடையவர்களுக்கு உதாரபுத்தியுமிரக்கமுமில்லாமல் இருக்கின்றது அவிவேகத்தினாலேதான். (அ0)

தெய்வவிரித்தமாகச் சிலசுகா சகத்துக்களில்கட்டுப்பாடாய்ப் பேசாநின்ற வசனங்களெல்லாம் புத்திமான்களுக்கு நச்சுவசனங்களாய்த் தோன்றவேண்டும். (அக)

சிவானுபவத் திருவாக்கியங்கள்
முற்றுப்பெற்றன.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சொரூபானுசந்தான நாமங்கள்.

நான் அகண்டன்	நான் அபயன்
நான் அகர்த்தா	நான் அபரிச்சின்னன்
நான் அகாமன்	நான் அபரோட்சன்
நான் அகாரணன்	நான் அபேதன்
நான் அகேயன்	நான் அபோக்தா
நான் அக்ரோதன்	நான் அப்பிரமேயன்
நான் அசங்கன்	நான் அப்பிரவிர்த்தன்
நான் அசம்சாரி	நான் அப்பிராணன்
நான் அசரீரன்	நான் அம்மனசு
நான் அசலன்	நான் அமிர்தன்
நான் அச்சுதன்	நான் அலேபன்
நான் அட்சரன்	நான் அவ்வியாகிருதன்
நான் அணு	நான் ஆதி
நான் அத்வைதன்	நான் ஆத்மா
நான் அநந்தன்	நான் ஆனந்தரூபன்
நான் அநாதி	நான் உன்னதன்
நான் அநாதிமுத்தன்	நான் ஏகரூபன்
நான் அநாவிருதன்	நான் காரணன்
நான் அநுபாதேயன்	நான் கூடஸ்தன்
நான் அநூதனன்	நான் சத்தியன்
நான் அநேகரூபன்	நான் சத்ரூபன்

நான் சம் பு
நான் சர்வகாரண ன்
நான் சர்வகெத ன்
நான் சர்வசம ன்
நான் சர்வஞ்ஞ ன்
நான் சர்வதோமுக ன்
நான் சர்வாகார ன்
நான் சர்வாதார ன்
நான் சர்வாதிஷ்டான ன்
நான் சர்வாத்ம ன்
நான் சர்வாபாவ ன்
நான் சாட் சி
நான் சாந்த ன்
நான் சின்மாத்ர ன்
நான் சிவ ன்
நான் சுத்த ன்
நான் சுவப்ரகாச ன்
நான் சுயம்பிரகாச ன்
நான் சுய ன்
நான் சூன்ய ன்
நான் சேத்திரக்ஞ ன்
நான் ஞானசொரூப ன்
நான் ஸ்தா ணு
நான் திருக் கு
நான் நாஞரூப ன்
நான் நிஷ்கிரிய ன்
நான் நிஷ்பிரகிரு தி
நான் நிஷ்பிரபஞ்ச ன்

நான் நித்தியமுத்த ன்
நான் நித்தியானந்த ன்
நான் நித்திய ன்
நான் நிரஞ்சன ன்
நான் நிரவயவ ன்
நான் நிராகார ன்
நான் நிராதார ன்
நான் நிரிந்திரிய ன்
நான் நிரீச்சுர ன்
நான் நிருபத்ரவ ன்
நான் நிரூப ன்
நான் நிர்க்குண ன்
நான் நிர்ச்சம்பந்த ன்
நான் நிர்ச்சீவ ன்
நான் நிர்த்தோட ன்
நான் நிர்ப்பெத்த ன்
நான் நிர்மல ன்
நான் நிர்லேப ன்
நான் நிர்விகற்ப ன்
நான் நிர்விகா ரி
நான் நிர்விசேஷ ன்
நான் நிர்விஷைய ன்
நான் நிர்விரத ன்
நான் பரமானந்த ன்
நான் பரமார்த்த ன்
நான் பரிபூரண ன்
நான் பிரத்தியக் கு
நான் பிரத்தியட்ச ன்

நான் பிரமம்	நான் [illegible]
நான் புத்தன்	நான் [illegible]
நான் புராதனன்	நான் [illegible]
நான் மகத்து	நான் [illegible]
நான் மகாசூன்யன்	நான் [illegible]
நான் மஹேசுவராசாமகோசரன்	நான் [illegible]
	நான் [illegible]
நான் முத்தன்	நான் [illegible]
நான் யதார்த்தவஸ்து	நான் [illegible]
நான் வஸ்து	
நான் விபு	நான் [illegible]
	நான் [illegible]
நான் பூரணன்	நான் [illegible]
நான் ஏகன்	நான் [illegible]
நான் பரப்பிரமம்	நான் [illegible]
நான் நிதானன்	நான் [illegible]
நான் கேவலன்	நான் [illegible]
நான் சூரியன்	நான் [illegible]
நான் சமன்	நான் [illegible]
நான் போதன்	நான் [illegible]
நான் இலக்கியன்	நான் [illegible]
நான் சநாதனன்	நான் [illegible]
நான் சிவன்	நான் [illegible]
நான் தத்துவம்	நான் பரம
நான் வின்	நான் [illegible]
நான் சோதி	நான் [illegible]
நான் ஆன்மா	நான் [illegible]
நான் சூக்குமன்	நான் [illegible]

[illegible]

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குறவைசுவாமிகள் இரட்டியருளிய

சீடாசாரம்.

வ துசொரூபங்காரிய மவதிபாலலட்சணம்
அட்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த
தாஷ்டாந்த உரை.

இவை

சரிவணக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு ஒருவாறாராய்ந்து

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

வியவருஷம் சித்திரைமீ

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குறவைசுவாமிகள் திரட்டியருளிய

சீடாசாரம்.

வஸ்துசொரூபாங்காரிய மவாதிபலலட்சணைம்
அட்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த
தாஷ்டாந்த உரை.

இவை

சாலிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்
ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்
ஆதீனத்திற்குரிய
ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்
மாணாக்கர்களிலொருவராகிய
அ - இராமசுவாமிகளால்
பலபிரதிரூபங்களைக்கொண்டு ஒருவாறாராய்ந்து

சென்னை
மிமோரியல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விய வருஷ சித்திரை மீ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சீடாசாரம்.

காப்பு.

ஆனைமுகனாறுமுக னம்பிகைபொனம்பலவன்
ஞானகுருவாணியை யுண்ணுடு.

நூல்.

முத்திக்கேது.

தந்தைதாயுமெய்த்தகைவுடையுறவுஞ்சாலுங் கல்வியுந்தகுமுயிர்த்துணையுஞ், சிந்தையாருநற்சீலமும்வலியுந் திருவுருமின்பமுஞ் சிதைவிலாவறிவு, முந்தையாமுளத்துவகையுமுயிருமூலமுத்தியுமொழிவருஞ்சமைவு, மெந்தையாகிவந்தேழையேனையுமாளிறைவனார்கழலாகுமென்றனக்கே. (க)

வேறு.

தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானு
மந்தமிலாவின்பநமக்காவானு-மெந்தமுயிர்
தானாகுவானுஞ் சரணாகுவானுமருட்
கோனாகுவானுங் குரு. (உ)

வேறு.

முத்திசித்திக்குமேது மொழிவர்கள்சிலர்வெவ்வேறே, சித்தமற்றுலாமென்றுந் தீவினைசிதைந்

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சீடாசாரம்.

காப்பு.

ஆனைமுகனாறுமுக னம்பிகைபொனம்பலவன்
ஞானகுருவாணியை யுண்ணுடு.

நூல்.

முத்திக்கேது.

தந்தைதாயுமெய்த்தகைவுடையுறவுஞ்சாலுங் கல்வியுந்தகுமுயிர்த்துணையுஞ், சிந்தையாருநற்சீலமும்வலியுந் திருவுருமின்பமுஞ் சிதைவிலாவறிவு, முந்தையாமுளத்துவகையுமுயிருமூலமுத்தியுமொழிவருஞ்சமைவு, மெந்தையாகிவந்தேழையேனையுமாளிறைவனார்கழலாகுமென்றனக்கே. (௧)

வேறு.

தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானு
மந்தமிலாவின்பநமக்காவானு-மெந்தமுயிர்
தானாகுவானுஞ் சரணாகுவானுமருட்
கோனாகுவானுங் குரு. (௨)

வேறு.

முத்திசித்திக்குமேது மொழிவர்கள்சிலர்வெவ்வேறே, சித்தமற்றுலாமென்றுந் தீவினைசிதைந்

தாலென்று, மொத்தநல்யோகாலென்று முரியஞா
னத்தாலென்று, மித்திறமனைத்தாலானா லெனுமிரு
வருளாலாமே. (௬)

எஞ்ஞானமந்திரங்கள் யோகங்களுபாயமெல்
லா, மெய்ஞ்ஞானவீட்டைக்காணும்வழிதானச்செ
ய்யமாட்டா, தெஞ்ஞானக்கடைக்கண்வைத்தச்சீ
சிகன்சித்தமத்தி,லஞ்ஞானம்பறிந்தபோதே *யமு
தவீடதுவுந்தோன்றும். (௭)

ஆர்த்ததுபிறவியென்றுமஞ்ஞானபாசமத்தை
க், கூர்த்தமெய்ஞ்ஞானவாளைக் கொண்டேயறுக்க
வேண்டு, மேத்திமெய்ஞ்ஞானவாளை யெய்யவல்லகு
ட்கண்ணாலே, பார்த்தபின்னில்லாப்பெருந்தம்பருதி
முன்னிருள்போலன்றே. (௮)

விடத்தினான்மூர்ச்சித்தானை விடம்வல்லார்பா
ர்க்கத்திரு,மடர்த்தல்லாரெல்லாம்பார்த்தமருதீரா
வாறுபோல, விடத்தினையுடையஞானவிறைவனேற்
பார்க்கினல்லாற், சடத்துவமாயையார்சொல்சடக்
குடைப்பிறப்பறுதே. (௯)

வேறு.

சுருதியுமிருதியுஞ் சொன்னவாயுவின், றிரு
மையுமநித்தமென் றேதும்விட்டுநம், குருவினைவ
ழிபடிற்கோதிலாவவ, னருளிடுமழிவற நின்றமெய்ப்
பொருள். (௰)

---

* அமலவீடென்று பாடமோதுவாருமுளர்.

வேறு.

எண்ணிலாக்கல்வியாலு மிலங்கிய கேள்வியா
லுங், இன்னதாமதியிறலுங்கெளியவாராதிரா ந
ன்னியஞானிதானே நயந்தருள்செய்யில்ஞானக்,
கண்ணினுற்காணலாகுங் கரத்திலாமலகம்போல.( )

பருவிடங்கடியுண்டாரே பாவிப்பான் கருட
ன்றன்னைப், பெருகியபித்தன்றானே பிறிந்துபோமரு
ந்துகொள்வா, னிருமையுமறியாமூடர்க் கிஃது
மோவிறையிற்கூடக், குருபரன்கூட்டிற்கூடுங்கூ (௯)
டாதேற்கூடாதென்றான்.

கட்டுண்டகன்வன்றானேகட்டினைவிட்டுக்கொ
ள்வான், விட்டவேதனையைத்தீர்த்து விடிப்பவர்
வேறேவேண்டு, மட்டமாசித்தியோகா லறிவிறல
றியலாமோ, தட்டறப்பாசந்தீர்க்கத் தற்பரங்குரு (௧௦)
வேவேண்டும்.

வேறு.

உருவன்றியேயின் அருவம்புணர்க்குங் கருவ
ன்றியேயின் றுதான்கருவாகு, மருவன்றியேநின்ற
மாயப்பிரானைக், குருவன்றியாவர்க்குங்கூடவொண் (௧௧)
ணதே,

வேறு.

முத்திசாதனம்.

தேசிகன்பதத்திற்சேவையின்வலியுந் திகழ்பதஞ்
சனவிலாவன்பு, மாசினன்முத்தியதில்விருப்பதுவு

மமலவாரணத்தினில்விருப்பு, நாசமாமிந்தவுடலி னில்வெறுப்புநசையறவிடயத்திலுவர்ப்பு, மீசனெ ப்பொருளுமென்னுநற்றுணிவு மிவையெழின்முத் திசாதனமே. (௧௨)

திகழுநற்குரவன்றிருவுளம்பார்த்துச் செய்யு மேவற்சிறப்பதுவு, மகிழுநற்குரவன் மருவுநம்பதி யே மன்னிநீங்காதவாதனையும், புகழுநற் றமரும் பொன்முதற்பொருளும் பொருந்துநோயெனமதித் திடலுந், தகைவுடைச்சமைவுஞ்சாந்தியுமுத்திசா தனமென்பர்தக்கோரே. (௧௩)

முடிகவித்துலகாள்திருவிகழ்ந்திறைவன்மொ ய்கழல்சூடுநற்றிருவும், படிதனக்கேவல்செய்பதமி கழ்ந்து பரமனுக்கேவல்செய்பதமு, மடையுநற்சு வைகளனைத்தையு மிகழ்ந்திங்கமலனற்சேடமாருத லு, மிடையறத்திகழுமுத்திசாதனமென்றிசைத்தி டுமெலையிலாரணமே. (௧௪)

துரிசினற்பாரம் பரியமாமுறையிற் றுகளறவ ழிவிலாத்துணிவும், பரிவுறக்குரவன்பாதமேமேனைக் கிப்பழுதறப்புகழுபண்பதுவு, மரியநற்குரவனருள றம்பொருளோடின்பம் வீடென்னுமாண்மையது ந், தெரிவுறத்திகழுமுத்திசாதனமாய்ச் செப்புவர் தெய்வஞானிகளே. (௧௫)

வேறு.

நேசநெஞ்சிஞற்றனக்கதுநினைவலவாயினுநெ ியன்றே, தேசிகன்றிருவுள்ளமே செய்குவான்

செனித்திடுங்குலத்துக்கு, மாசதாகினுமாச்சிரமத் திலேவழுவினுமுலகெல்லா, மேசிவீடினுமறம்புக ழ்தனம் பிறவிழுப்பினுமிடரோனும். (கசு)

என்றனக்கிதுவாய்த்தவாறறிகிலே னெம்பிரா ன்கழற்கேவ, றன்றனக்குநாஞரிதுதகுவதோ தமி யனேற்கென்றென்று, சென்றுறப்பெருமார்வமும ச்சமுஞ்செறிதரவடிமைக்க, ணின்றியற்றியதேவ லினியல்பெண நிகழ்மறைசொலுமைந்தா. (கஎ)

நிறம்பெறநீராடாமுன் னீராடானின்றிடவி ருத்தல்தான்கிடத்த, லுறங்குமுன்னுறங்கலுண்ணு முன்னுண்ட லுணாயெனலுணாயாமலுணாத்த, லற ம்பழியெவற்குங்கூறுத லருளாததுசெய்தலருளிய பணியை, மறந்தனனென்றல்குருவலாற்றெய்வம திக்தல்செய்பவன்மகனல்லன். (கஅ)

வேறு.

அருளறமங்கறைந்திடுத லறமலாதுணாத்தல றைபொழுதிலிடையுணாத்த லகங்கரித்தங்குணாத் தல்,பொருளறிவுதானுரைத்தல்பொருளல்லாதுணா த்தல் புன்கோட்டிகொண்டுணாத்தல்பொடிவனவ ங்குணாத்த,லிருளுறுமச்செவிசொல்லலேவலிசைத் திடுதலிடமறியாதிறைபருளிச்செயவுரைத்தல் வின வல், தெருளுறுநற்குருகீர்த்தியல்லது பாடிடுதல் தேசிகன்றன்சன்னதியிற் றீரவிடுமிவையே. (ககூ)

வேறு.

வெஞ்சொலுங்கடுஞ்சொலும் விளைந்தசொல்லதும், வஞ்சமும்பழுதுடன்மாறுகூறலும், பஞ்சிடுமுலகியல்பயனில்வாசகந், தஞ்சநாயகன்றன்முன்றவிரவேண்டுமால். (௨0)

வேறு.

ஆதனஞ்சயனம் வாகனமிதியடி யத்திரங்குடையொடாபரண, மீதுவண்டயிலங்குளியொடுபூச்சந்தன முதன்மேவியங்கிடுத, லோதுபல்லுருஞ்சல்லொண்பதம் விளக்கலுமைத்தவெற்றிலை தின்மிவைதா, ஞாதிநன்குரவனரியசன்னதியிலடியவராமவிடுந்தொழிலே. (௨௧)

இறைவன்முன் பசிங்கிதமாகவந் திடுதலிட்டவேடத்திறைஞ்சாதல், கறையுறுஞ்சாயையிறைமுவன்மேற்படுதல் கடவுளினிழறன்மேம்படுத, லுறைதருதலத்தின்மே லிருந்திடுதலுளமுகமு குளமாயிருத்த, லறைதருமமலனரியசன்னதியி லடியவாமவிடுந்தொழிலே. (௨௨)

வேறு.

போற்றுகைதவிர்தலுநதன் பொருளினைப்புசித்தலிதல், தூற்றுதரோடந்தன்னைச் சொன்னதைமறுத்தல்பொய்கள், சாற்றுதல்குலமுங்கல்வி தனத்தபிமானம்பண்ணன், மாற்றுதல்கொடுத்தறன்னை மற்றிவைகுருவோடாகா. (௨௩)

வேறு.

தீரிடத்திறுதிசெயிருளிடத்திறு நெறிகணிற்பய
முறுபயிடத்தும், இராருட்குரவன்முன்பு சேவிப்பா
ன் றிகழ்ந்தமற்றனைநெறியவற்றிற், பொருட்குரவ
ன்பின்புசேவிப்பான்பிறிதொருதிறத்தையற்றிறைவ,
ஞார்திருக்கழலிற்சாயை போன்முன்பின்றய்விடா
ரன்பிறுத்தமரோ. (௨௪)

வேறு.

தன்றுளத்தெழுநீங்குதறையகன், முன்றுணா
த்திளிமேன்முளையாவகை, சொன்னவப்பரிசேசுட
வேண்டலா, லன்னவப்பதிவிட்டகல்வானலன். ( )

வேறு.

தனமாக்காயமுயிர்மூன்றுந் தலைவற்கீந்தங்கி
னைகெடிறு,மனவாக்காயகன்மத்தால்வணக்கங்கெ
டாதமனத்தராய், நினைவாக்காயமஷ்டாங்கபஞ்சா
ஙகநேர்சிட்டாங்க, மெனநால்வணக்கஞ்சிராங்கமு
டனிறையாம்பிறவியறுவோர்க்கே. (௨௫)

சென்றபோதிறைவன்றிருவடித்தலத்தேதிறங்
தபஞ்சாங்கவட்டாங்க, மொன்றவேவணங்கியெயா
ப்பிலானருளையுளமதுநிறையவேபருகிப், பின்னரா
ப்பரிசேவிடைகொளும்பொழுதும்வணங்குக பெரி
யவன்முகப்பே, நின்றுநெக்குருகித்தன்றன்வாயரா
த்துதிப்பதாதியன்பருக்கே. (௨௭)

குரவனார்திர்த்துமொழிவனவெல்லாங்குருதர மாகவோதிடுகத், தெரியுமாறரியஞானகோசத்தை த்தெரிந்திடினெடுத்தவிழ்த்திறைமு, னரியவாதன த்தில்வைத்திறையருட்டாள் வணங்கியங்கதன்பய ன்கேட்டாங், குரியகோசத்தைக்கட்டிநாயகன்று ளொப்பறவணங்குதலொழுக்கே. (உ௮)

எப்படிக்கீழாமவர்களேயெனினுமிறையுளத்த டைத்தவர்தம்மை, யப்பரம்பரமனென்றுளத்து ணர்கவயன்முதன்மூவரோயெனினு, மெய்ப்படவி றைவன்றிருவுளமிலதேன் மீண்டுபாராதுகைவிடு க, செப்பிடவிறைவன்றிருவருணிறைந்தசீடராசார நன்கிதுவே. (உ௯)

இப்பரிசிறைவன்றிருவுளம்பிழையாதிலங்கிய வேவலின்வலியா, லெப்பரிசுள்ளசித்திகள்வலிகளி சைந்திடாதிற்குமங்கவர்பா, லப்பரிசெல்லாச்சித்தி யும்வந்தாலகத்தையும்வியப்புமேவாமே, தப்பறவெ னையாடம்பிரானேவற்றன்மையென்றருளினைப்பணி வாம். (௩0)

பெருந்தவமில்லான்றன்னைப்பேணியமடந்தை யுள்ளத், திருந்தவைமுடிந்ததென்றலிகபரந்தெரிந் தஞானப்,பெருந்தவக்குருவைத்தெய்வமென்றுமெ ய்பேணவல்லார்க், கரும்பொருளியாதுமில்லையிரு மையுமகலிடத்தே. (௩௧)

சாற்றியபரிசிற்றவறுதலேலவன்மறுத்தலாம்பி ழையதுசாற்றி, னூற்றவங்கதனைத்தீர்த்திடற்குபா யமாய்ந்திடத்தொன்றினுவில்லேச், சேற்றினைச்சேற் றூற்கழுவலாயிடுமோ தெளிந்தநீர் கொண்டலால துபோ, லாற்றியவிறைவனருடருநீராலப்பிழைச் சேறுநீக்கிடுவான். (௩௨)

வெற்றுளகுற்றமியாவையுந்தீர்க்கும் விமல மாமிறையருளென்று, லாற்றவங்குற்றபிழையைநீ க்குவதுமவனருளன்றிவேறுண்டோ, போற்றியங் கவன்றன்பொன்னடிபொருந்திப் புனிதபாதோதக மாடி, யாற்றவங்கமலனருளினைமுழுக்கிலக்கணந்தி ருமப்பிழையே. (௩௩)

அறைந்தவப்பரிசப்பிழையினைநீக்கா தவனெரி நிரயம்வீழ்ந்தழியும், பிறந்திடிற்பிரமவரக்கனும்பெ ரும்பாம்பாமெனப்பெருமறைபேசுஞ், சிறந்தனபி ழைதீர்வளவுமங்கவன்றன் றெரிசனம்பரிசனந்தகு மோ, மறந்துமற்றனுசார்மாதவத்தடியாரனுகில்வ ன்பாதகமன்றே. (௩௪)

தேசிகன்றிருவுள்ளமுண்டாக வச்சிவந்திகழ்ந் திடுகின்று, னீசனிங்கருள்செய்யவந்திருக்கிறவிட மிவன்றிருமேனி, மாசதொன்றிவ னளவிலேசெ யிலெரிவாய்நரகினிற்பூத, நாசமெவ்வளவவ்வளவு ஞ்செலநண்ணுநன்னெறிநண்ணான். (௩௫)

வேறு.

குரவனேகுறியேதுமிலாச்சிவ, ஞரியசத்தியே யொப்பிலாவம்பிகை, கருதுமைந்தரோகந்தர்விஞய கர், பெருகுசுற்றமும்பேணுமபத்தரோ. (ருடரு)

வேறு.

சற்குருப்பரசிவன்ருஞயினும்வாசிசாற்றிம், ச ற்குருசிவன்கோபித்தாற் சமிப்பிக்குஞ்சிவனுமெல் லுஞ், சற்குருகோபந்தன்னைச்சமிப்பிக்கவொண்ணு தத்தாற், சற்குருநாதன்பாதந்தப்பிடான்முத்தன ன்றே. (ருடஎ)

வேறு.

அருவெனுமமலன்ரு னருளிலனெனினுஞ்சார்
குருபரனருளுண்டே யெனிலொருகுறையுண்டோ
திருவடிதரவந்தார் திருவுளமிலவொன்ரு
லொருவருமிலர்கண்டீ ருறுதுயர்களைகின்ரூர். ( )

வேறு.

குருபரனேபரமசிவன்பரோசன்ரூனே குருவா ளுமாகினுமேயொருகாலத்தி, னிருமலமாம்பரமசி வன்முனிவுற்ருலு நிகரில்தயாநிதியானகுரவன்கா ப்ப, னருள்வடிவேதிருவுருவாயெழுந்துநின்ற வா சிரியனென்றேனுமுனிவுற்ருனேற், றிரிவிதமாமு லகத்துமம்மானனேத் தியக்கமெலாந்தீர்த்தெவரு ங்காப்பதில்லை. (ருடகூ)

தந்தைமுதற்பெந்துவெலாமனந்ததேகந் தரு வதலாலனாதிபவபந்தந்நீர்க்கார், சிந்தையினிலாய்ந் திடலப்பெந்துவெல்லாஞ் சிறுமைதருஞ்சத்துரு வேயாகாநிற்ப, ரந்தமிலாவருள்வடிவாங்குருவேவா வென்று லகண்டபரஞானத்தை யருளானல்கித், தொந்தமதாமனாதிபவபந்தமெல்லாந் துப்பறவேவந் ன்றாகத்துடைத்துக்காப்பன். (௩௦)

வேறு.

இந்தவிடும்பையுடம்புறுமேது, தந்தையென ப்புகழ்கின்றிலர்தக்கோ, ரந்தமிலாதவகண்டமுநம் முட், டந்தவர்தந்தையெனச்சமைவுற்றார். (௩௧)

வேறு.

குருபாதம்பூசிநாளுங் குருநாமஞ்செபியெப் போதுங், குருபாதந்தியானம்பண்ணு குருகீர்த்தி தோத்திரஞ்செய், குருபாதநினைக்கத்தீருங் குருத் தோடமல்லாத்தோடங், குருபாதந் தன்மேலுண் டோ குருவின்பேர்சிவனுமன்றே. (௩௨)

வேறு.

வருபிறப்பறவேவேண்டிநான்மறையிறைன்னு மம்புயத்தினைமலர்த்தற், கிரவியாய்நெஞ்சிற்கிசைந் தநற்குருவை யாதொருவழியினிலிறைஞ்சி, யருள் சுரந்திடுதற்காவதேசெய்வா னருமறைமுடிவெலா மறையும், பொருளோநேராகவுமக்கெனக்கீசன்புகன் றவப்படியிலேபுகன்றேன், (௩௩)

வேறு.

ஆசிரியன்முன்பாக வகண்டார்த்தத்தைநயடைவாக வறிவுற்றமாஞானந்தத், தேசிகனைத்திரவியமேமுதலிருந்துந் திடமானலோபத்தாற்பூசியானென், மோசனமேயிலாதவனாய்க்கும்பிபாக முநரகியதில் வீழ்ந்திடுவனாதலாலே, தேசிகனையாவிபொருளாக்கையாலே தினந்தினமும் பூசிக்கவேண்டுமாஞான்.

(சசு)

வேறு.

தேசிகருமாணவர்கள்செய்தியுணர்ந்திட்டவெசிறியோரைப்பெரியோர்செய் தொழிலதனிற் செறித்து, மேசிலராம்பெரியோரை யீனமாந்தொழிற்கேயிசைத்துமடித்தும்வைது மிவ்வாறுசெயவுங், கூசியிடாதிட்டபணிசெய்துகுருபத்தி குறைவிலராய் நம்பினராய்த்துரோகமின்றி,மாசிலராய்மனவாக்குக்காயத்தாற்குருவின்வாக்கியபாலனஞ்செய்யு மதிமானுமாயே.

(சரு)

வேறு.

குருபானுக்கவனெஞ்சகம்போ லனுகூலத்தனாய்க், கரசரணாதியினேவல்செய்தேதினங் கட்கிமைபோ, லுரியமனைமுதலி யாவையுங்காத் துண்மையாயொருதற், பரமிவனேயெனக்காண்பான்சற்சீடன்பகர்ந்திடினே.

(சசா)

வேறு.

தேசிகன்பாற்பற்பலதீக் குணங்கள்செறியினு நம், பாசப்பிராந்திக்கிவைதோற்றிய விறைபாலிலை யென், ஞசறுபத்தியினேர்ந்தெவ்விதத்து மவனரு ளாத், தேசங்குலவவளர்ப்போன் சற்சீடன்றெரிந்தி டினே. (சஎ)

வேறு.

விடையேறியீசன்வரின் மூடருமவன்வேண் டியதைப், படிமீதளிப்பர்குருவேசிவமெனப்பாவ ணேமுற், றுடையார்கடத்த முடலாவியீந்திறையுண் மைபெறத், தடையாதுளவிங்குளதேலபக்குவர்தா மவரோ. (சஅ)

வேறு.

உடற்குயிர்போற்கட்கிமைபோ லூசினூலொ த்து, விடிற்புலிதீப்பாம்பினில்வீழ்வார்க்காஞ்சுடர் ச்சுடினும், வாழைக்காகா வேதிமட்கலத்திற்காகா வா, றேழைக்காகாதிது. (சகூ)

வேறு.

ஆசான்மொழியானூற்பொருளாலன்றிப்பெற வுமரிதாகும், தேசார்குருநூன்மாணுக்கன்சிறக்கவி ம்மூவருங்கூடிற், பாசாதீதப்பரமெய்தும் பன்னுணீ ங்காவிக்கூட்ட, மேசாவுணர்வைத்தரும்பகற்போ தெல்லாத்தொழிலுந்தருவதுபோல். (ருo)

பாடல் முற்றிற்று.

வசனம்.

ஸ்திரீயானவள் நாயகனோடே கூடிக்கொண்டிருந்தாற்பணிவிடைசெய்யவேண்டுமென்றுகளித்திருந்தால் சுகமாயிருக்கலாமென்றும் நினைத்து அந்தநாயகனுக்கு மனவருத்தமுண்டாகும்படியாயவனை விட்டு நீங்கி இருந்தா லிம்மையிற்சுகமுமிழந்து மறுமையில் நரகமுமனுபவிப்பதுபோலச் சீடனானவன் ஞானாசாரியரிடத்திற்குப்போ யவரிடத்திற் சில சாத்திரங்களை யப்பியாசித் தறிந்துகொண்டு நாமினி யிவரிடத்திலே யிருந்தா லிவருக்குப்பணிவிடை செய்துகொண்டிருக்கவேண்டுமென்றும் நம்முடையசிரவணஞ்தியனு சந்தானத்துக்கு விரோதம்வருமென்று மிவரிடத்தில்நமக்குதேகத்துக்கொத்துக்கொள்ளாதென்றுமிது முதலான காரியங்களை நினைத்து அந்த ஞானாசாரியருக்கு மனதிற்றிவேசம் வரும்படியா யவரைவிட்டு நீங்கியிருக்கின்றவனுக்கு இம்மையிற்றுன்பமு மறுமையில் நரகமு முண்டாகுமாதலால் கற்புடைய ஸ்திரீயானவ ளறியாமையைப் பொருந்தியிருந்து மாத்மசொரூபத்தை யறியாம லனுத்மசொரூபமே தானென்றிருக்கின்றதனது நாயகனைத் தெய்வமாகப் பாவித்து அவன் அடித்து வைதல்முதலாயின செய்தபோதிலு மவனிடத்திற் றிவேசமன்றியிற் பிரியமாகதேகமுள்ள

பரியந்த மவனை விட்டு நீங்காமற் றிரிவித கரணங்களாலும் பணிவிடைசெய்து கொண்டிருக்கின்றவனுக்கு இம்மையிற்சுகமு மறுமையிற்சொர்க்காதிலோகமுமுண்டாவதுபோல உத்தமமான விவேகமுள்ள முமுட்சுவானவன் ஞானாசாரியனை சத்தியக் ஞான ஆனந்தானந்த பரமசிவமென்று வேதாதிகள்சொன்ன பிரகாரம் நம்பி அவரடிமுதலானகாரியங்கள் செய்தபோதிலுஞ் செய்யத்தகாத கிர்த்தியங்களைச் செய்யச்சொன்ன போதிலும் வெறுப்படைந்து அவனைவிட்டு நீங்காதபடிக்கு மிகுந்தபிரியத்தோடுந் தேகமுள்ளவரைக்குந் திரிவிதகரணங்களாலும் பணிவிடைசெய்து நின்று அந்தக் குருசுவாமிகிருபையால் தத்துவக் ஞானத்தைப்பெற்று மோக்ஷமடையவேண்டுமென்று வேதாகமபுராணங்கள் கூறுதலால் இப்போதிருக்கின்ற முமுட்சுக்களு மிதிற்சொன்ன பிரகாரம் ஞானாசாரியனைப்பரமசிவமாகப் பாவித்துத்தேகமுள்ள பரியந்தமு மவனைவிட்டு நீங்காமற் றிரிவிதகரணங்களாலும் பணிவிடை செய்து நின்று அவர் கிருபையாலுண்டாகாநின்ற தத்துவக்ஞானத்தினாற் பரமோக்ஷசுகத்தையடையவேண்டியது.

சிஷ்டாசாரம்-முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஏதுசொரூபங்காரியமவதிபலலக்ஷணம்.

காமத்துக்கு.

ஏது, அஞ்ஞானம், சொரூபம், அக்கினியில் நய்விட்டால் விர்த்தி யடைகிறதுபோல நமக்கிரு கின்ற போகமெல்லா முத்தரோத்தரமாய் விர்த் யடையவேண்டுமென்றும் நமக்கிருக்கின்ற ஐசுவ ரியமெல்லாமாறுமலிருக்க வேண்டுமென்றும்ஸ்திரீ முதலான விடயங்கள்மென்மேலும் வேண்டுமெ றும் நானாவிதமாய்ச் சிந்திக்கப்படுகிறது, காரி ம், அந்த விடயத்திலுண்டான பிரியத்தை நா றுவிதமாய்ச் சிந்தித்துத் தானிருந்த விடத்தை விட்டு லோகாலோகங்களுக்குப்போய் நரகாசூரன் முதலானபேர்களைப்போல இஷ்டமான வஸ்துக்க ளைச் சம்பாதிக்கிறது, அவதி அத்தியந்த நிராசை யுதையம். (௧)

குரோதத்துக்கு.

ஏது, ஆசை, சொரூபம், ஆசையானவிடயத்தில் விக்கினம் பண்ணினவனிடத்திற் கோப முண்டாய் வியாக்கிரரூபமாய் நோக்கிக் கடினமான வசனந்

சொல்லுகிறது, காரியம், தன்னாற்செயிக்கப்படுமா
னால் பகாசூரன் முதலானபேர்களைப்போல அடிமு
தலான காரியங்கள் பண்ணுகிறது தன்னாற்செயிக்
கக்கூடாதிருந்தா லுள்ளே யிருந்துகொண்டு பொ
ருமியழுகிறது, அவதி, அத்தியந்தஞ் சாந்தமாயிரு
க்கின்ற பொறுமையுடையம். (௨)

லோபத்துக்கு.

ஏது, மோகம், சொரூபம். தேனீயுங் கவரிமா
னும்போலத் தான் சம்பாதித்த செல்வ முத
லான வஸ்துக்களிற்றேகமுள்ளளவு மொருத்தருக்
கு மொன்றுங் கொடுக்கலாகாதென்று சிந்திக்கிற
து, காரியம், தான் சம்பாதித்த பதார்த்தங்களி லூ
ரின் நடுவேயிருக்கின்ற நச்சுமாமரம்போலவுந் துரி
யோதனன் முதலானபேர்களைப்போலவு மொருத்
தருக்கு மொன்றுங் கொடாமல் வைத்துக்கொள்ளு
கிறது, அவதி, அத்தியந்தமுதாரத்துவம்.

இந்தமூன்றுக்கும் பலமேதென்று லிகலோகப
ரலோக நிந்தையு மிப்போது தேகமுதலானவஸ்து
நாசத்தினாற்றுன்பமும் பின்னாலே சென்ன மரண
சமுசாரமு மநுபவிக்கப்படுகிறது. (௩)

நிராசைக்கு.

ஏது, நிட்காமமாய்ச்செய்கின்ற சற்கருமபுண்
ணிய பரிபாகம். சொரூபம், ஸ்திரீமுதலான விடய

த்திலுள்ள குணதோஷங்களை விசாரித்ததிலுள்ள வாசையை விட்டுவிடுகிறது, காரியம், ஆசைவிட்ட பதார்த்தங்களிற் றதிசிமகாரிஷி முதலானபேர்களைப்போலச் சரீரமுதலான வஸ்துக்களைக் கேட்டபேர்களுக்குக்கொடுத்துவிடுகிறது, அவதி, அத்தியந்தங்காமத்துக்கு நாசம். (சு)

பொறுமைக்கு.

ஏது, நிராசை, சொரூபம், தன் வேலைக்காரன் முதலானபேர்களடிமுதலான காரியங்களைச் செய்தபோதிலும் வினைப்பிரகாரம்வருமென்கின்றவிவேகத்தினுற் பொறுத்துக்கொள்ளுகிறது, காரியம், தனக்கபகாரம்பண்ணின பேர்களுக்குப் பூமியைப்போலவுந் தர்மபுத்திரர் முதலான பேர்களைப்போலவு முபகாரம்பண்ணுகிறது, அவதி, அத்தியந்தங்குரோதத்துக்கு நாசம். (ரு)

உதாரத்துக்கு.

ஏது, குணகுணங்களைப்பகுத்துப் பார்க்கின்ற விவேகம். சொரூபம், ஊரின் நடுவே நிறைந்திருக்கின்ற நல்ல சலமுள்ள தடாகமும் நன்றாய்ப்பழுத்து நிழலுடைத்தாயிருக்கின்ற மாமரமும் போலச் சகல சனங்களுக்கு முபகாரமாயிருக்கிறது, காரியம், வேர்முதற்கொழுந்துவரைக்கு முயிர்களுக்கு மருந்திற் குபகாரமா யிருக்கின்ற மரம்போலவுஞ் சிவிச்சக்கிரவர்த்தியைப் போலவுங் கேட்டபேர்க

ளுக்கெல்லாங் கேட்டவஸ்துக்களைக்கொடுக்கிறது, அவதி, அத்தியந்தம் லோபத்திற்கு நாசம்.

இந்த மூன்றுக்கும் பலமேதென்றா லிகலோக பரலோக கீர்த்தியு மிப்போது துக்கமற்றுச் சுகமாயிருந்துகொண்டு ஞானசாதனஞ்சம்பாதித்துமோக்ஷமடையப்படு மிந்த ஞானசாதனஞ் சம்பாதிக்குங்காலத்திற் றேகமிறந்தாற் சொர்க்காதி லோகத்திலுள்ள சுகமனுபவிக்கப்படும். (சா)

நித்தியா நித்திய வஸ்து விவேகத்துக்கு.

ஏது, சித்தசுத்தி, சொரூபம், பிரமமாத்திரஞ் சத்தியம் அன்னியமாயிருக்கின்ற ஜீவேசுர சகத்தெல்லா மசத்தியமென்று சாத்திரத்தினால் நிச்சயிக்கிறது, காரியம். அதைத்தானே சதாகாலமு நானுவிதமாய்ச்சிந்திக்கிறது. அவதி, பிரமமாத்திரஞ் சத்தியமன்னியமா யிருக்கின்ற ஜீவேசுர சகத்தெல்லா மநித்தியமென்றிருக்கின்ற நிச்சயம் ஒன்றினாலும்போகாமல் நன்றாய்த்திடமாயிருக்கிறது. (எ)

இகமுத்தரார்த்த பலபோகவிராகத்துக்கு.

ஏது, இகலோக பரலோகங்களிலுள்ள ஸ்திரீ முதலான விடயங்களில் அசுத்த துக்க வநித்தியத்துவமுதலான தன்மைகளை விசாரித்து வெறுப்பு வருகிறது, சொருபம், அந்த விடயங்களை நாய்தின்று கக்கின அசனம்போலவுங் காலாக்கினி நரகமு

தலானதுபோலவுங் கண்டு விட்டுவிடுகிறது, காரியம், விட்டவிடயத்தி லொருபோதிலுந் திரும்ப ஆசை வராமலிருக்கிறது, அவதி, தேகத்தை தொட்டுப்பிரமலோக பரியந்தமா யிருக்கின்ற விகலோக பரலோகங்களிலிருக்கிற சகலபோகங்களிலேயு மாசையில்லாமற் றிரணம்போல உபேட்சையா யிருக்கிறது. (அ)

சமாதிசட்கசம்பத்திக்கு.

ஏது, இயமநியமாதி, சொரூபம், விடயத்திலே பிறவிர்த்தி யற்றிருக்கிற சித்தநிரோதம், காரியம், ஒன்றிலேயும் பிறவிர்த்தி யற்றபடியினாலே விவகாரக்ஷயம், அவதி, பிறவிர்த்தி யற்றபடியினாலே சுழுத்தியைப்போலே தேக முதலான விடயங்களை மறந்திருக்கிறது. (கூ)

முமுட்சுத்துவத்துக்கு.

ஏது, சாதுசங்கம், சொரூபம், தலை ரோமத்திலே நெருப்பு பற்றிக்கொண்டவனைப்போலப் பின்னையொன்றிலேயு மாசையில்லாமல் மோக்ஷமாத்திரத்திலே தீவிரமாக ஆசை யுண்டாகிறது, காரியம், சற்குருவைத்தேடி யடைகிறது, அவதி, சகல கருமங்களையுந் தியாகம்பண்ணுகிறது.

இந்தச்சாதனங்கள் நாலுக்கும்பலமேதென்றால், இந்த நாலு மொருமித்துக்கூடாமல் வேறுவேறாய்ப்பிரிந்திருந்தாற் சொர்க்காதியாயிருக்கின்ற பு

ண்ணியலோகப்பிராப்தியே பலம், நாலுமொருமித்
துக்கூடினு லிங்கேதானே ஆத்மவிசாரபலம். (௧௦)

பந்தத்துக்கு.

ஏது, கருமசாஸ்திர வனுட்டானம், சொரூப
ம். திரிசியமாய்த்தோற்றுகின்ற சிந்தனை, காரியம்,
திரிசியத்தினிடத்தில்வாசனையோடுநானுவிதமாய்ச்
சத்தியமா யழுந்துகின்ற சிந்தனை, அவதி, சகல தி
ரிசியமு மில்லையென்கின்ற வத்தியந்தா பாவக்ஞா
னம், பலம், சமுசாரதுன்பம். (௧௧)

மோட்சத்துக்கு.

ஏது, ஞானசாஸ்திரவனுட்டானம், சொரூப
ம். திரிசிய சிந்தனை யில்லாமலிருக்கிறது, காரியம்,
திரிசிய சிந்தனையானது வாசனையோடு வத்தியந்த
மொன்று மில்லாமலிருக்கிறது, அவதி, சின்மாத்தி
ரமாய் விளங்குகிறது, பலம், பிரமானந்தம். (௧௨)

ஞானத்துக்கு.

ஏது, சிரவணமனனநிதித்தியாசனம், சொரூ
பம், சுவானுபவத்தினுலே தேகாதிப்பிரபஞ்ச மநித்
தியமென்றுந் தானுகின்ற வகண்டபரிபூரண சச்சி
தானந்தப்பிரமமே சத்தியமென்றும் வேறுபட்டிரு
க்கிறது, காரியம், மித்தையான தேகாதிசகத்தினி
டத்திலே சத்தியபுத்திவாராமலும் ஆத்மாவினிட
த்திலே தானென்றுறைத்த சத்தியபுத்தி வாங்காம

லிருக்கிறது, அவதி, அஞ்ஞானகாலத்திற் சந்தேக விபரீதமன்றியிலே தேகமேதா னென்றிருந்தாற் போல ஞானகாலத்திலே தேகோகமென்கின்ற புத்தியை வாதிக்காநின்ற சிவோகமென்கின்ற உறைப்புத்திடம், பலம், அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரமான மோக்ஷம். (௧௩)

அஞ்ஞானத்துக்கு.

ஏது, நிரோது, சொரூபம், ஒன்பது விதத்தினாலும் நிரூபிக்கப்படாமலிருக்கின்றது, காரியம், ஜீவேசுர சகத்தாய்த் தோற்றுகிறது, அவதி, ஞானோதயம், பலம், நிஷ்பலம். (௧௪)

அசம்பாவனைக்கு.

ஏது, சிரத்தையுடன் வேதாந்த சிரவணஞ் செய்யாமை, சொரூபம், ஆத்ம சொரூப சிந்தனையை மறைத்தல். காரியம், ஜீவேசுர சகத்துச் சிந்தனையைத்தோற்றுவித்தல், அவதி, அவதி பரியந்தமுண்டான சிரவணம், பலம் தாபத்திரயத் துன்பப்படுகிறது. (௧௫)

சமுசயபாவனைக்கு.

ஏது, விசாரமில்லாமலிருக்கிறது, சொரூபம், தான் கர்த்தாவோ சாட்சியோ, சாட்சி யென்றாலுங் கர்த்தத்துவ போத்தத்துவாதி யுண்டோ வில்லையோ, கர்த்தத்துவாதி யில்லாவிட்டாலும் அவருக்குப் பூரணத்துவ முண்டோ வில்லையோ பூரணத்

துவமுண்டானாலும் அவனை யறியக்கூடுமோ கூடாதோ, அவனை யறிந்தாலும் மோட்சம் வருமோ வாராதோ வென்று இது முதலாய்வருகின்ற சித்தவிருத்திகள், காரியம், முன்சொன்ன சித்தவிருத்திகள் திரும்பத்திரும்பப் பலவிதமா யுண்டாகிறது, அவதி. தீர்க்க காலவிசாரம், பலம், இகலோக பரலோக போகங்க ளிரண்டு மற்றுத் துன்ப மடைகிறது. (௧௬)

விபரீதபாவனைக்கு.

ஏது, ஆத்மத்தியானஞ் செய்யாதிருக்கின்றது, சொரூபம். தேகமே தானென்றும் பிரபஞ்சஞ் சத்தியமென்றும் இது முதலாய் வருகின்ற விருத்திகள், காரியம், நான் பிராமணாதி வருணமென்றும், நான் பிரமச்சாரி முதலான ஆச்சிரம மென்றும், நான் காத்தியாயினர் முதலான குலமென்றும், நான் கிருஷிமுதலான தொழில் பண்ணுகிறவ னென்றும், நான் யாகாதிகள் பண்ணினேன், நான் அன்னாதிகள் பொசித்தேன், நான் கடாதிகளை யறிந்தேனென்றும் இது முதலாக வருகின்ற விருத்திகள், அவதி, நாமரூபப்பிரவிர்த்தி யில்லாம லிருக்கின்ற தானாகிற ஆத்மத்தியானம், பலம். செனனமரண சமுசார துக்கத்தி லடிபடுகிறது. (௧௭)

சிரவணத்துக்கு.

ஏது, மூன்று சாதனமும் வந்து அதிதீவிரமாயிருக்கிற முமூட்சுத்துவம், சொரூபம், வேதாந்தத்

உகூ ஏதுசொரூபங்காரிய மவதிபலலக்ஷணம்.

திற்கிதரமான சாஸ்திரங்களைச்சிரவணம்பண்ணாது அத்தொய்த வாத்மாவாயிருக்கின்ற சொரூபத்தை ஆறுலிங்கத்தினாலுஞ் சதா சிரவணம்பண்ணி ஆத்மா வுண்டென் றறிகிறது, காரியம். ஆத்மா இல்லையென்கின்ற அசத்தாவரணம் நசிக்கிறது. அவதி, நஷ்டமாய்ப்போனஅசத்தாவரணந்திரும்ப வாராமலிருக்கின்ற பரியந்தஞ் சிரவணம் பண்ணுகிறது, பலம். திடமாயிருக்கின்ற பரோட்சக்ஞானம்.

மனனத்துக்கு.

ஏது, அவதிபரியந்தம் சிரவணம்பண்ணியுண்டாயிருக்கின்ற நித்தியாநித்திய வஸ்துவிவேகம், சொரூபம், சூட்சுமமான புத்தியினாலே யேகாக்கிரமா யிருந்துகொண்டு பஞ்சகோசத்தில் அத்வைத ஆத்மதத்துவத்தை விசாரித்துத் தானென்றறிகிறது, காரியம், ஆத்மாவிருந்தாற் றோற்றாரோ இல்லையென்கின்ற அபானுவரண நஷ்டமாகிறது. அவதி. நஷ்டமான அபானுவரணந் திரும்பவாராமலிருக்கின்றபரியந்தம் விசாரம்பண்ணுகிறது, பலம், அபரோட்சக்ஞானம், (கக)

நிதித்தியாசனத்துக்கு.

ஏது, சாதனசதுட்டயத்துடனேகூடி அவதிபரியந்தம் நன்றாயனுட்டிக்கப்பட்ட சிரவண மனனங்கள், சொரூபம், அகண்டபரிபூரண சச்சிதானந்தப்பிரமமேநான் நானே அகண்டபரிபூரணசச்சி

தானந்தப் பிரமமென்று பிரியத்துடனே விச்சின்
னமன்றியிலே தைலதாரைபோலச் சுசாதீகவிருத்தி
யோடே சந்ததந் தியானம்பண்ணுகிறது, காரியம்,
உள்ளிலும் புறம்பிலுஞ் சத்தாதிவிடயங்கள் தோ
ற்றுமற் றியானமாத்திரமா யிருக்கிறது. அவதி, தி
யானமுந் தியானிக்கப்படுகின்றவனு மிழந்து சுத்
தசத்துவமன தாய்ப் பாலிற்கலந்தசலம்போல அக
ண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரமத்தில் ஏகரச
மாய்க் கலந்திருப்பது,பலம்,அப்பிரதிபந்தஅபரோ
ட்ச சாட்சாத்காரமான ஞானம். (உ0)

வாசனைக்கு.

ஏது, பகிர்முக நாட்டமாகிய விடயசன்னதி,
சொரூபம், மதுபானம் பண்ணினவன் றனது சுபா
வந்தெரியாம லதனது சுபாவமா யிருக்கின்றது
போல வநாதிகாலந்தொட்டு இருதயத்தில் வசித்து
க்கொண்டிராநின்ற அசுத்தவாசனையாகிய காமாதி
விருத்திகளால் முன்பின் னென்றையும் விசாரித்
துப்பாராமல் அந்தந்த விஷயாகாரத்தை யடைந்
திருக்கிறது, காரியம், முன்சொன்ன வசுத்தவாச
னையாகிய காமாதிவிருத்திகள் பலவிதமாயுண்டாய்
அமிர்தமாயு மணுவுக் கணுவாயும் அத்வைதமாயு
மகண்டானந்தமாயு மிருக்கின்ற தனதாத்மசுபாவ
ந்தோன்றாம லிருக்கிறது. அவதி, மனோலயம், பல
ம், சுகதுக்காதியு மதனால் விட்சேபம் இல்லாததா

யும் விமலமாயும் விஞ்ஞானமாயும் விமுத்தமாயும் விபுவாயுமிருக்கின்ற பிரமசொரூபமென்கின்ற தத்துவக்ஞான நிவிர்த்தியுமதனாற் சனனமரண சமுசாரமு முண்டாகப்படும். (உக)

வாசனாக்ஷயத்துக்கு.

ஏது, அசுமுக நாட்டமாகிய விடயசன்னிதித்தியாகம், சொரூபம், சமர்த்தனானவன் றனக்குப்பகையாளனிடத்தி லுண்டானகுற்றத்தை நன்றாய் விசாரித் தறிகின்றதுபோலக் காமாதி யசுத்தவாசனைகட்குள் தன்னிடத்தி லின்னவின்ன வசுத்தவாசனைக ளிருக்கிறதென்று நன்றாய்ப் பகுத்தறிந்து கொண்டு வியாதியுடைத்தா னவன்றன்னிடத்தி லின்னவின்ன வியாதி யிருக்கிறதென்றறிந் ததுவதுகளுக்குத் தகுந்த வவுடதங்களைப் புசிக்கின்றது போல மைத்திரியாதி சுத்தவாசனைகட்குள் அதுவதுகளுக்குத் தகுந்த சுத்தவாசனையைச் சிரத்தையோடுந் தினந்தோறும் நன்றாயப்பியாசிக்கின்றது, காரியம், முன்புசித்த அவுடதத்தால் ரோகம்நாளுக்குநாள் சாந்தமா யாரோக்கிய முண்டாகின்றதுபோல நாளுக்குநாள் காமாதியசுத்தவாசனைகள் சாந்தமாய் மைத்திரியாதி சுத்தவாசனைகள் விர்த்தியடைகின்றது, அவதி, முன்சாந்தமான காமாதியசுத்தவாசனைகள் திரும்பவுண்டாகாமலிருக்கின்றது, பலம், சித்தோபசாந்தமு மதனால் அமலமாயு

மக்கிரியமாயு மப்பிரமேயமாயு மசங்கமாயு மிருக்கி
ன்ற பிரமசொரூபமே நான் நானேயமலமாயு மக்
கிரியமாயு மப்பிரமேயமாயு மசங்கமாயு மிருக்கின்
ற பிரமசொரூபமென்கின்ற தத்துவக்ஞான ரட்
சையு மதனாற் சனனமரண சமுசாரதுன்ப நீக்கமு
ம்வரும். (உஉ)

மனத்துக்கு.

ஏது, பகிர்முக நாட்டத்தாலுண்டாகிறகாமா
திவாசனைகள், சொரூபம், மெழுகு சலமுதலான
வஸ்துக்கள்போல வனேகவிருத்திகள் பரிணமிக்கி
ன்றதற் கேதுவாயுந் திரிகுணாத்மகமாயு மியானெ
னதென் றபிமானமுடைத்தாயு மிருந்துகொண்டு
தீபச்சுவாலைபோல அத்தைப் பண்ணவேண்டு மித்
தை விடவேண்டுமென்று மத்தைப்புசிக்கவேண்டு
மித்தைநீக்கவேண்டு மென்று மத்தைப்பார்க்கவே
ண்டுமித்தைப்பார்க்கவேண்டாமென்றுமிதுமுதலா
யுண்டாகாநின்ற விருத்திகள், காரியம், முன்சொன்
னவிருத்திகள் க்ஷணக்ஷணே நானாவிதமா யுண்
டாகி நித்த சுத்த புத்த முத்த சத்திய பரமானந்த
சொரூபந் தானென்று தோன்றாமலிருக்கிறது, அ
வதி, வாசனாட்சயம், பலம். வாசனாவிர்த்திகளினும்
சத்தாயுஞ் சர்வசமமாயுஞ் சர்வசாட்சியாயுஞ் சர்
வாத்மகமாயு மிருக்கின்ற பிரமசொரூபமே நான்
நானேசத்தாயுஞ் சர்வசமமாயுஞ் சர்வசாட்சியாயு
ஞ் சர்வாத்மகமாயு மிருக்கின்ற பிரமசொரூபமெ

ன்கின்ற தத்துவக்ஞான நிவிர்த்தியு மதனாற்சனன
மரண சமுசாரதுன்பமு மனுபவிக்கப்படும்.(உ௩)

மனோலயத்துக்கு.

ஏது; அகமுக நாட்டத்தா லுண்டாகின்ற கா
மாதி வாசனாட்சயம். சொரூபம், மிகுந்த சிரத்தை
யுடனே சத்தியக்ஞானவனந்தானந்த பிரம சொரூ
பமே நான் நானே யந்தச் சத்தியக்ஞான வனந்தா
னந்தப்பிரமசொரூபமென்று பிரியத்துடனே விச்
சின்னமன்றியிலே தைலதாரைபோலச் சுசாதீக வி
ருத்தியுடனேகூடிக்கொண்டுசந்ததந்தியானம்பண்
ணுகிறது,காரியம். வாசனாட்சயத்தினாற்றூமதராசத
விருத்திகள் கெட்டுப்பாலிற்கலந்தசலம்போல நிர்க்
குணமாயும் நிர்மலமாயும் நிர்விகாரமாயும் நிர்விக
ற்பமாயும் நித்தியானந்தமாயுமிருக்கின்ற தன தாத்
மசொரூபத்தில் சுத்த சாத்திக விருத்தி மாத்திரமா
ய் லயித்திருக்கின்றது, அவதி, முன் சாந்தமான
தாமதராசதவிருத்திகள் திரும்பவுண்டாகாம லிருக்
கின்றது, பலம். வாசனாட்சயத்தினால் சுத்தமாய்ச்
சுபாவமாய்ச் சுகமாயிருக்கின்ற பிரமசொரூபமே
நான் நானே சுத்தமாய்ச் சுபாவமாய்ச் சுகமாயிருக்
கின்றபிரம சொரூபமென்கின்றதத்துவக்ஞானரட்
சையாய் அதனாற் சனனமரண சமுசாரதுன்ப நீங்
கிப் பிரமானந்த மனுபவிக்கப்படும்.

ஏதுசொரூபங் காரிய மவதிபல லக்ஷணம்
முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

அஷ்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த தாஷ்டாந்த உரை.

உற்றெதிரேகாண்டல் பிரத்தியட்ச மனுமான மோங்குபுகைகண்டு நெருப்புண்டெனவே யுணர்தன், மற்றுவமைமரை பசுப்போலெனல் சத்தம் பெரியோர்வாய்ச் சொலருத்தாபத்தி மதத்தவுடல தனு, லற்றவுப்வாசி யொளித்துண்பா னென்றுணர்தல பாவமுன்பினிடை யொருகாலத்து மிலையெனரு, னற்றியவிம்மரத்தினிற் பேயுண்டெனலைதிக நாட்டுதலே சம்பவம்பிரமாணமெட்டா நவிலும்.

பிரத்தியட்சம்.

(உற்றெதிரேகாண்டல் பிரத்தியட்சம்) என்றது கட்டையை பிரத்தியட்சமாய்ப் பொருந்திக் காண்பதுவே பிரத்தியட்சப்பிரமாணம். இது விபரீதப் பிரத்தியட்சம், சந்தேகப்பிரத்தியட்சம், யதார்த்தப்பிரத்தியட்சமென மூன்றுவகைப்படும். அதாவது. கட்டையைக் கள்ளனென்றே நிச்சயிப்பது விபரீதப் பிரத்தியட்சம். கட்டையைக்கண்டு கள்ளனோதறியோவென்பது சந்தேகப் பிரத்தியட்சம்.

கட்டையைக் கட்டையென்றறிவதுவே யதார்த்த ப்பிரத்தியட்சம். இதுவே பிரத்தியட்சப்பிரமாண ம். இதற்குத் தாட்டாந்தமென்னவென்றால் சராச ராத்மகப்பிரபஞ்சங்களைப் பிரத்தியட்சமாயறியாநி ன்றவறிவாகிய பிரமசொரூபந் தானென்றறிவது வே பிரத்தியட்சப் பிரமாணம். இது விபரீதப் பிர த்தியட்சம், சந்தேகப்பிரத்தியட்சம், யதார்த்தப் பிரத்தியட்சமென மூன்றுவகைப்படும். அதாவது ஆசாரியர் சீடனைப்பார்த்து நீயே அறிவாகிய பிரமசொரூபமென் றனுக்கிரகம்பண்ண அப் போது சீடனானே யறிவாகி பிரமசொரூப மானா ற் பிரத்தியட்சமாக வல்லவோ விளங்கவேண்டும். அப்படி யறிவாகிய பிரமசொரூபம் பிரத்தியட்ச மாய் விளங்காமற் றேகமல்லவோ பிரத்தியட்சமா ய் விளங்குகிறதென்பதுவே விபரீதப் பிரத்தியட்ச ம். அப்போது ஆசாரியர்தேகமே பிரத்தியட்சமா ய்விளங்கினாற் சொற்பனத்திலுன் சரீரமிவ்விடத் திற் சுகமாய் மெத்தையிற் படுத்திருக்கவும் நானா விததேசத்தினானாவிதசரீரமெடுத்துக்கொண்டு துக் கப்படுவது ஆரென்றுகேட்க அப்போது சீடனான வன் சுவாமீ வேறொன்றுபோலத் தோற்றுகிறது. ஆனாலுந் தேகந்தானோ அறிவுதானோ வென்பது வே சந்தேகப்பிரத்தியட்சம். அப்போது ஆசாரிய ர் அறிவாகி பிரமசொரூபஞ் சுழுத்தியிலொன்று

மறியாத வஞ்ஞானவிருட்டிலே நானொன்று மறி
யேன் சுகமாய் நித்திரைபண்ணினேனென்று அறி
கிறபடியினாலேயுஞ் சாக்கிரத்திற் றேகத்திற்குள்
ளே சோமசூரியாக்கினியாதி பிரகாசங்களில்லாமலி
ருக்கவும் மனோராச்சியத்திற் றோற்றுகின்ற நாமரூ
பங்களை விளக்குவித்து அறிகிறபடியினாலேயுந் தே
கத்துக்குவெளியினானாவித கடபடாதி வியாபாரங்
களை யறிகிறபடியினாலேயுந் தேகமிவைகளொன்
றையு மறியாதபடியினாலேயுந் தேகநீயல்ல. இப்ப
டிப் பிரத்தியட்சமாய் விளங்காநின்ற அவத்தாத்தி
ரய சாட்சியாயிருக்கின்ற வறிவாகிய பிரமசொரூப
மே நீயென்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன
றிவாகிய பிரமசொரூபந்தானென் றறிந்ததுவே
யதார்த்தப் பிரத்தியட்சம். இதுவே பிரத்தியட்ச
ப்பிரமாணம்.

அனுமானம்.

(அனுமானமோங்கு புகைகண்டு நெருப்புண்
டெனவே யுணர்தல்) என்றது, விர்த்தியடையாநி
ன்ற புகையைக்கண்டு அக்கினியுண்டென்றறிவது
வேயனுமானப்பிரமாணம். இது, பிரதிக்கினை, ஏது
திட்டாந்தம், என்று மூன்றுவிதத்தா லறியப்படும்.
அதாவது பருவதத்தி லக்கினியுண்டென்பது, பிர
திக்கினை. அதிலக்கினியுண்டென்பதற்கு. ஏதுவெ
ன்னவென்று கேட்கப் புகையைக்கண்டு. அக்கினி

புண்டென்றுசொன்னேனென்பதுவே. ஏது, புகை யுண்டானவிடத்திலக்கினியுண்டென்பதற்குத்திட் டாந்த மென்னவென்று கேட்க, மடைப்பள்ளியிற் புகையைக்கண்டு அக்கினியைக்கண்டேனென்பது வே திட்டாந்தம், இதுவே அனுமானப் பிரமாண ம். இதற்குத் திட்டாந்தமென்னவென்றாற் சகலத் தையும் விளக்குவித்தறிகிறபடியினாற் பஞ்சகோச த்தி லறிவாகிய பிரமசொரூப முண்டென் றறிவது வேயனுமானப்பிரமாணம். இது பிரதிக்கினை, ஏது, திட்டாந்த, மென மூன்றுவிதத்தா லறியப்படும். அதாவது ஆசாரியர், சீடனைப்பார்த்துப் பஞ்சகோ சத்திலறிவாகிய பிரமசொரூபமுண்டென் றனுக்கிர கம் பண்ணுவது, பிரதிக்கினை. அப்போது சீடன் ப ஞ்சகோசத்திலறிவாகிய பிரமசொரூப முண்டென் பதற்கு ஏதுவென்னவென்றுகேட்க, ஆசாரியர், தே கேந்திரியாதிகளையு மதினுடைய தொழில்களையு ம றிவதுவே யேதுவென் றனுக்கிரகம்பண்ண, அப் போது சீடனிவைகளை யறிகிறதற்கு அறிவாகிய பி ரமசொரூப முண்டென்பதற்குத் திட்டாந்த மென் னவென்று கேட்க, ஆசாரியர், சுழுத்திமூர்ச்சையா திகாலங்களிலே சகல கரணங்களு மிறந்திருக்கவும் விருத்தி வந்தவுடனே யொன்று மறியாத வஞ்ஞா னத்தையு மதிற் பிரதிவிம்பித்த ஆனந்தமுதலான வைகளையு மறிந்து சொல்லுகிறதே திட்டாந்த மெ

ன்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடனுனே யறி
வாகிய பிரம சொரூபமென் றறிந்ததுவே யனுமா
னப்பிரமாணம்.

உவமானம்.

(மற்றுவமைமரைபசுப்போலெனல்) என்றது
பசுவைப்போலிருக்கும் மரையென்பது உவமானப்
பிரமாணம். இதற்குத் தாட்டாந்த மென்னவென்
ருல், ஆசாரியர், சீடனைப்பார்த்துச் சராசராத்மகப்
பிரபஞ்சங்களுக்கெல்லா மிடமாயுஞ் சகலத்திலும்
பொருந்தியும் பொருந்தாமலிருக்கின்ற பூதாகாச
த்தைப்போலச் சிதாகாச சொரூபமா யிருக்கின்ற
பிரமஞ் சகலஅண்டங்களுக்கெல்லா மிடமாயுஞ் ச
கலத்திலும் பொருந்தியும் பொருந்தாம லிருக்கின்
றது. அந்தச்சிதாகாச சொரூபமாகிய பிரமமே நீ
யென் றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் சிதா
காசசொரூபமாகிய பிரமந் தானென்றறிந்ததுவே
யுவமானப்பிரமாணம்.

ஆகமம்.

(சத்தம் பெரியோர் வாய்ச்சொல்)என்றது,சொ
ர்க்கத்திலே யமுதாதிபோகங்க ளிருக்கின்றன. யா
காதிகிருத்துக்கள்செய்தா லந்தப்போகங்களையடை
யலாமென்று மேலோர்கள் சொல்ல அந்த வார்த்
தையை நிச்சயமாய்க்கேட்டு அந்தப்படி யாகாதி கி
ருத்துக்கள் செய்து அமுதாதிபோகங்களையடைவ

துவே யாகமப்பிரமாணம். இதற்குத் தாட்டாந்த மென்னவென்றால், ஆசாரியர், சீடனைப்பார்த்துத் தேகத்திற் சர்வசாட்சியாகிய சச்சிதானந்த சொரு பமிருக்கிறது. தேகேந்திரியாதி சகங்களை நெயதிப ண்ணியந்தர்முகமாய் நாடினாலந்தச் சர்வசாட்சி யாகிய சச்சிதானந்தசொருபத்தை யடையலா மெ ன்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறுசீடன் துவம்பத தற்பதங்களை விசாரஞ்செய்து தேகேந்திரியாதிசக ங்களை நெயதிபண்ணி யந்தர்முகமாய் நாடி அகண் டாகார விருத்தியினால் தன்னைச் சர்வசாட்சியாகிய சச்சிதானந்த சொருபமாயறிந்ததுவே யாகமப் பிர மாணம்.

அருத்தாபத்தி.

(அருத்தாபத்தி மதத்தவுடலதனா லற்றவுப வாசி யொளித்துண்பானென்றுணர்தல்) என்றது, நித்திய வுபவாசியென்கின்றவனுடைய தேகபீனத் துவத்தைக்கண்டு இவனித்திய வுபவாசியானாற் றேகமிளைத்தல்லவோ விருக்கவேண்டு மப்படி யிளை யாமற் பெருத்திருக்கின்றபடியினாலிவனி ராக்கால த்திலொளித்துப் புசிப்பானென்றதுவே அருத்தா பத்திப் பிரமாணம். இதற்குத் தாட்டாந்தமென்ன வென்று, லாசாரியர், தேகமே யாத்மாவென்றிருக் கின்ற சீடனுட் சச்சிதானந்த லட்சணத்தையுடை ய பிரமசொருபத்துக்கன்னியமான வசத்துச் சட

ந்துக்கத்தைக்கண்டு தேகமே யாத்மாவானும் சச்சி
தானந்த லட்சணமாயல்லவோ விருக்கவேண்டும்.
அப்படியிராமற் காலத்திலுற் கெட்டுப்போகின்ற
படியினு லசத்தாயுஞ், சுழுத்திமூர்ச்சைகளிலொன்
றையு மறியாதபடியினுற்சடமாயுந், தேகந்தோற்று
கின்ற சாக்கிர சொற்பனங்களிற் கிலேசப்படுகின்ற
படியினுற் றுக்கமாயு, மிருக்கின்றபடியினுற் சரீரத்
திரயங்களு மாத்மாவல்ல. பூருவத்திற் செய்திராநி
ன்ற புண்ணியாதிகளினு லிப்போது செல்வவானு
கியா யிருக்கிறேமென்று,மிப்போது செய்யாநின்ற
புண்ணியாதிகளினு லினிமேற் சொர்க்கமுதலான
போகங்களை யடைவோமென்று,மிப்போது மிருக்
கிறேமென்று,மிப்படித் திரிகாலத்திலு மிருக்கிறவ
னுபவ மிருக்கின்றபடியினுற், சத்தாயுஞ், சுழுத்தி
மூர்ச்சை முதலானவைகளை யறிகிறவனுபவ மிருக்
கின்றபடியினுற்,சித்தாயுந்,தேகந்தோற்றமலிருக்கி
ன்றசுழுத்திசமாதிகளிற்சுகானுபவமிருக்கின்றபடி
யினு,லானந்தமாயு,மிருக்கிறபடியினுற்சச்சிதானந்த
லட்சணமுடைய பிரமசொரூபமேநீயென்றனுக்கி
ரகம்பண்ண அவ்வாறு சீடன் சச்சிதானந்த லட்ச
ணமுடையபிரமசொரூபந்தானென்றறிந்ததுவேய
ருத்தாபத்திப் பிரமாணம், இதைத் திட்டவருத்தா
பத்தியென்று மின்னம் வேறேகேள்வி யருத்தாப
த்தியுண்டென்றுஞ்சொல்லுவார்கள். அதாவது ஒரு

த்தை யறிந்தால் தாபத்திரய துக்கம் நீங்கிச் சுகம் வருமென் றனுக்கிரகம்பண்ண அவனுமவ்வாறுதே கத்திரயங்களை விசாரித்துத்தள்ளிச் சீவனைக்கண்டு இந்தச் சீவன்றானா ஆன்மாவென்று ஆசாரியரை க்கேட்க அப்போது ஆசாரியரிந்தச்சீவன் அசத்து ச்சடந் துக்கமானபடியினால் இவன் ஆத்மாவல்ல வென் றனுக்கிரகம்பண்ண அந்தச்சத்தத்திற் சீட ன் சச்சிதானந்தமாய் ஆத்மா வேறேயுண்டென்ற றிந்து அவரே தானாய்ப் பிரமானந்தத்தை யடை ந்து துக்க நிவிர்த்தியானதுவே கேள்வி யருத்தா பத்தி.

அபாவம்.

(அபாவமுன்பி னிடை யொருகாலத்து மில்லை யெனலாகும்) என்றது, ஒருகடத்தைப்பார்த்து இந்தக்கட முண்டாகிறதற்கு முன் மண்ணைத்தவிர வேறில்லாதபடியினா லிந்தக்கட முன்னில்லையெ ன்றும், இந்தக்கட முடைந்ததின்பிறகு மண்ணைத்தவிர வேறில்லாதபடியினா லிந்தக்கடம் பின்னுமில்லையென்றும், இப்போது கடந்தோற்றுகின்றகாலத்தும் விசாரித்துப்பார்க்கும்போது மண்ணைத்தவிர வேறில்லாதபடியினாலு மிந்தக்கட மிடையிலுமில்லையென்று, மிப்படித்திரிகாலத்திலும் மண்ணைத்தவிர வேறேகட மில்லாதபடியினாற் சசவிஷாணககனார விந்தம்போ லிந்தக்கடமொருக்காலு

மில்லையென்றுமிப்படியறிவதுவே யபாவப்பிரமா ணம், இதற்குத் தாட்டாந்த மென்னவென்றால் ஆசாரியார் சீடனைப்பார்த்து இந்தச்சீவேசுரசகத்தாகியமாயை சிருட்டிக்குமுன் பிரம சொரூபத்தைத்தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லிந்தமாயை முன்னேயில்லையென்றும், அத்தியந்தப்பிரளயத்துக்குப் பின் பிரமசொரூபத்தைத் தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லிந்தமாயை பின்னுமில்லையென்றும், இப்போது அத்தியாரோபமாய்ச்சிருட்டி தோன்றுகின்றகாலத்தும் அபவாதமாய் விசாரித்துப் பார்க்கும்போது பிரமசொரூபத்தைத்தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லிந்தமாயை யிப்போதுமில்லையென்று,மிப்படித் திரிகாலத்திலும் பிரமசொரூபத்தைத்தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினாற் சசவிஷாணங் ககனாரவிந்தம்போ லிந்தச்சீவேசுர சகத்தாகியமாயையொருகாலத்து மில்லையென் றனுக்கிரகம் பண்ண. அவ்வாறு சீடன், பிரமசொரூபமே யெப்போதுமிருக்கிறது. நானே யந்தப் பிரமசொரூப மென்றும் இந்தச்சீவேசுர சகத்தாகிய மாயையொருக்காலுமில்லையென்று மறிவதுவே யபாவப்பிரமாணம்.

ஐதீகம்.

(நம்பிய விம்மரத்தினிற் பேயுண்டென ஐதீகம்) என்றது, நல்லவிடத்திலிருக்கின்ற வொருவட

திஷ்டாந்த தாஷ்டாந்த உரை.

விருட்சத்தி லொருபுருடனவ னிலையும்பறித்து
விறகுமொடித் திறங்கும்போது தனக்கு ஆப்தனா
னவன்வந்து அடாபைத்தியகாரா இந்தவிருட்சத்
தில் மகாஎட்சசு இருக்கிறதே யென்றுசொல்ல அங்
தவசனத்தைக்கேட்டமாத்திரமேயந்தப்பசாசுபிடி
த்து மனத்திற்பயமுஞ் சரீரத்தினடுக்கமுமுண்டா
யிலையும்விறகுமெறிந்துபோட்டு மரத்தினின்றுங்கீ
ழேவிழுந்ததுவே ஐதீகப்பிரமாணம். இதற்குத்திரு
ட்டாந்த மென்னவென்றால், ஆசாரியர், தேகமேதா
னென்றுகொண்டு அதிற் சுகமிருக்கிறதாகப் பிரப
ஞ்சவியாபாரம் பண்ணிக்கொண் டிருக்கின்ற சிட
னைப்பார்த்துத்தேகநீயல்லதேகத்தினிடத்திற் சச்சி
தானந்த சொரூபமாகிய வாத்மாவிருக்கிறா ரவரே
நீயென் றனுக்கிரகம்பண்ண, அந்தவசனத்தைச் சி
டன் சத்தியமாய்க்கேட்டுச் சச்சிதானந்த சொரூப
மாகிய வாத்மாவேதானாய்க் கவலைகெட்டுத் திருப்தி
யடைந்து தேகாதிப் பிரபஞ்சத்தை விட்டதுவே
ஐதீகப்பிரமாணம்.

சம்பவம்.

(நாட்டுதலை சம்பவம்) என்றது, ஆயிரத்து
க்குள்ளொன்று பத்து நூறு ஐந்நூறு எல்லாமி
ருக்கு மிருந்தாலு மாயிரத்தைத்தவிர வேறில்லை
யென்றறிவதுவே சம்பவப்பிரமாணம். இதற்குத்தா
ட்டாந்த மென்னவென்றால், ஆசாரியர் சிடனைப்

பார்த்துப் பிரமசொரூபமாகிய வுன்னிடத்திற்சரா சராத்மகப் பிரபஞ்சங்க ளெல்லாமிருக்கும், இருந் தாலும் பிரமசொரூபமாகிய வுன்னைத்தவிர வேறல் லவென்றனுக்கிரகம்பண்ண அவ்வாறு சீடன்சர்வா த்மக சொரூபமாகிய பிரமசொரூபந் தானென்றறி ந்ததுவே சம்பவப்பிரமாணம். (பிரமாணமெட்டா நவிலும்)என்றது இவ்வாறு ஆத்மாவையறிதற்குப் பிரமாணங்கள் எட்டாக வேதங்கூறியது என்ற வாறு.

அஷ்டப்பிரமாணத்தின்

திஷ்டாந்த தாஷ்டாந்தஉரை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-சேஷாத்திரிசிவனார் அருளிச்செய்த

தத்துவக்கட்டளையென்று வழங்குகின்ற

நானாசீவவாதக்கட்டளை.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய வருஷ சித்திரைமீ

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-சேஷாத்திரிசிவனார் அருளிச்செய்த

தத்துவக்கட்டளையென்று வழங்குகின்ற

நானாசீவவாதக்கட்டளை.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரை௴

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நாஞசிவவாதக்கட்டளை.

சுத்தப்பிரமமா யிருக்கின்ற சர்வசாட்சியி னிடத்திலே அக்கினியிற்சூடுபோலஅபின்னமாகவொரு சத்தியுண்டு. அந்தச்சத்தி அந்தப்பிரமத்தி லடங்கியிருக்கும்போது சுத்தப்பிரமமென்று பெயர். இந்தச்சத்தி விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது பரைவியாபகத்துக்குள் ளிருந்தபடியினாலே பரப்பிரம மென்று பெயராயிற்று.

இலட்சணசூனியமா யிருக்கின்ற விந்தச்சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்திற் புருஷசமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ்சனித்தாற்போல விகிர்த குணமற்ற சாந்தரச தமோகுண முண்டாயின. இந்தச் சுத்தசாந்தத்திற்கு ஆனந்தரூப சத்தியென்று பெயர். சுத்தரசத்திற்குச் சித்துரூபசத்தியென்றுபெயர். சுத்த தமத்திற்குச் சத்துரூபசத்தியென்று பெயர். இந்தக்காரணமான வானந்தரூப சத்தியுடனே பரப்பிரமங் கூடிச் சர்வானந்த சுமூர்த்தியை யடைகின்றபோது பரப்பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமானந்தனென்கின்ற பெயர் வந்தது. இந்தப்பரமானந்தர் சித்துரூப சத்தியுடனே

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நாஞானசீவவாதக்கட்டளை.

சுத்தப்பிரமமா யிருக்கின்ற சர்வசாட்சியி னிடத்திலே அக்கினியிற்சூடுபோலஅபின்னமாகவொரு சத்தியுண்டு. அந்தச்சத்தி அந்தப்பிரமத்தி லடங்கி யிருக்கும்போது சுத்தப்பிரமமென்று பெயர். இந்தச்சத்தி விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது பராவியாபகத்துக்குள் ளிருந்தபடியினாலே பரப்பிரம மென்று பெயராயிற்று.

இலட்சணசூனியமா யிருக்கின்ற விந்தச்சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்திற் புருஷசமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ்சனித்தாற்போல விகிர்த குணமற்ற சாந்தரச தமோகுண முண்டாயின. இந்தச் சுத்தசாந்தத்திற்கு ஆனந்தரூப சத்தியென்று பெயர். சுத்தரசத்திற்குச் சித்துரூபசத்தியென்றுபெயர். சுத்த தமத்திற்குச் சத்துரூபசத்தியென்று பெயர். இந்தக்காரணமான வானந்தரூப சத்தியுடனே பரப்பிரமங் கூடிச் சர்வானந்த சுமூத்தியை யடைகின்றபோது பரப்பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமானந்தனென்கின்ற பெயர் வந்தது. இந்தப்பரமானந்தர் சித்துரூப சத்தியுடனே

கூடிச் சர்வப்பிரகாசமென்கின்ற சொற்பனாவத்தை யை யடைகின்றபோது பரமானந்த னென்கின்ற பெயர் போய்ப் பரிபூரண னென்கின்ற பெயர்வந்தது. இந்தப் பரிபூரணர் சத்துரூப சத்தியுடனே கூடிச் சர்வவியாபகமென்கின்ற சாக்கிராவத்தை யை யடைகின்றபோது பரிபூரணனென்கின்ற பெயர் போய்ப் பரனென்கின்ற பெயர்வந்தது.

இந்த அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரமத்தினிடத்திலே சுத்தியில் ரசிதந்தோன்றினாற் போல மூலப்பிரகிருதி யென்றொரு சத்தியுண்டாயிற்று. அந்தமூலப்பிரகிருதியும் விகிர்தகுணமாகிய முக்குணத்துடனே கூடியிருக்கும். அந்தப்பிரகிருதியின் சாத்துவிதகுணத்தை மாயையென்றுஞ் சர்வகனா வுபாதியென்றும் ஈசுரகாரண சரீரமென்றுஞ் சொல்லப்படும். இந்தமாயையினிடத்திலே நிர்மல சலப்பிரதி விம்பம்போலப் பிரமஞ்சுலட்சணமாகப் பிரதிவிம்பிக்கும். இந்த விம்பசைதன்யத்தைச் சர்வக்ஞராகிய ஈசுரனென்று சொல்லப்படும்.

இந்தச் சாத்திககுணமாயையினிடத்திலே சாத்திகத்திற் சாத்திகம் சாத்திகத்தி லிராசதம் சாத்திகத்திற் றாமதமென்று மூன்றுகுண முண்டாயின. இதிற் சாத்திகத்திற் சாத்திகம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தை இரட்சிக்கையினால் விஷ்ணுவென்று சொல்லப்படும்.

சாத்திகத்தி லிராசதம்பிரதான மாகும்போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தைச் சிருஷ்டிக்கையினால் பிரமாவென்று சொல்லப்படும். சாத்திகத்திற் றமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தை யுபசங்காரம் பண்ணுகையினால் உருத்திரனென்று சொல்லப்படும். இப்படி மூலப்பிரகிருதியின் சாத்திகருணகற்பனை சொல்லப்பட்டது.

இனி மூலப்பிரகிருதியி னிராசதகுண மனேகரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றுஞ் சீவகாரண சரீரங்களென்றும் ஒன்றுக்கொன்று தாரதன்மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிடத்திலும் மலினசலப்பிரதி விம்பம்போலப் பிரமசைதன்னியம் பிரதிவிம்பிக்கும். இந்த விம்பசைதன்யங்களைக் கிஞ்சிக்ஞனென்றுஞ் சீவசிதாபாசனென்றும் பிராக்ஞனென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராசதத்திற் சாத்தீகம் இராசதத்தி லிராசதம் இராசதத்திற் றமதமென்று மூன்று குணமுண்டு. இராசதத்திற் சாத்தீகம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த சிதாபாசன் தத்துவக்ஞான நிஷ்டனாவன். இராசதத்திலிராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த சிதாபாசன் காமக்குரோதபராயக் கன்மநிஷ்டனாவன். இராசதத்திற் றமதம் பிரதான

மாகும்போது அதிற் பிரதி விம்பித்த சிதாபாசன் சோம்பல்நித்திரை மயக்கங்களையடைவன். இப்படி மூலப்பிரகிருதியி னிராசதகுண கற்பனை சொல்லப் பட்டது.

இனி மூலப்பிரகிருதியின் றாமத குணத்திற்கு ஆவரணம் விட்சேபமென் றிரண்டு சத்திகளுண்டு. இதில் ஆவரணசத்தியென்பது தத்துவஞ்ஞானியை யும் ஈசுரனையுந் தவிர மற்றச் சீவருக்கெல்லாஞ் சரீரத்திரயம் சிதாபாசன் சாட்சி சைதன்யங்களையொ ன்றுக்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட சீவன் இருபத்தொன் பது தத்துவங்களையு மொருமைப்பாடாக நானெ ன் றபிமானிப்பன். இந்தவபிமானத்தை யகங்காரக் கிரந்தியென்றும் சம்சாரபந்தமென்றுஞ் சொல்லப் படும். சற்குருகடாட்சத்தினாலே இந்த ஆவரண நீங்கி இருபத்தொன்பது தத்துவத்திற்கு மொன் றுக்கொன்று பேதந்தெரிகின்றதேமுத்தி. இப்படி ஆவரண சத்தியின்காரியஞ் சொல்லப்பட்டது.

இனி விட்சேப சத்தியினிடத்திலுஞ் சத்த தன்மாத்திரையான வாகாசம் பிறந்தது. ஆகாசத் திலும் பரிசதன்மாத்திரையான வாயுபிறந்தது. வா யுவிலும் ரூபதன்மாத்திரையான அக்கினிபிறந்தது. அக்கினியிலும் ரசதன்மாத்திரையான அப்புப்பிற ந்தது. அப்புவிலும் கந்ததன்மாத்திரையான பிரு

துவிபிறந்தது. இந்த சூட்சுமபஞ்சபூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விட்சேப சத்தியினிடத்திலே தாமதத்திற் சாத்திகம் தாமதத்தி லிராசதம் தாமதத்திற்றாமதமென்று அற்பங்கருவிருந்தபடியினாலே அதன் காரியமான இந்தத் தன்மாத்திரையான பஞ்சபூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன. இந்தப்பஞ்சபூதங்களுக்குத் தன்மாத்திரைகளென்றும் அபஞ்சிகிர்த பூதங்களென்றுஞ் சூட்சும பூதங்களென்றும் முக்குணபூதங்களென்றுஞ் சாத்திரங்களிலே சொல்லப்படும்.

இந்தச் சூட்சுமபூதங்களினின்று சூட்சும சரீரங்களுந் தூலபூதங்களும் பிறந்தன. அதெங்ஙனெனின் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினுடைய சாத்திகாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக்கரணத்தி லாகாசத்தினம் சங்கூடினதற் கடையாளம். இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கு மிடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்குத் தேயுசுவென்று பெயர். இந்தவந்தக்கரணத்தில் வாயுவினம்சங்கூடினதற் கடையாளம். இந்த வந்தக்கரணமும் வாயுவைப்போல வலைகிறது. இப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர். இந்தவந்தக்கரணத்தில் அக்கினியி னம்சங்

கூடினதற் கடையாளம். இந்த வந்தக்கரணமும் அக்கினியைப்போல இது இன்னதென்று விளக்கு விக்கிறது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தியென்றுபெயர். இந்தவந்தக்கரணத்தில் அப்புவினம் சங்கூடினதற் கடையாளம். இந்தவந்தக் கரணமும் அப்புவைப்போல விடயங்களிற்பற்றி யிழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர். இந்த வந்தக்கரணத்திற் பிரு துவியினம் சங்கூடினதற்கடையாளம். இந்தவந்தக் கரணமும் பிருதுவியைப்போலக் கடினமாகநின்று நானென்று அபிமானிக்கின்றது. இப்படி அபிமா னிக்கின்ற விருத்திக்கு அகங்காரமென்று பெயர்.

இன்னம் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினு டைய சாத்திகாம்சத்திலே பூதத்திற் கோரொருமா த்திரை எடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோ த்திராதி ஞானேந்திரியமென்று சொல்லப்படும். இதிற் சுரோத்திர மாகாசத்தினம் சமானபடியினு லே யாகாசத்தின் குணமான சப்தமாத்திரத்தை யறியும். துவக்கு வாயுவினம்சமானபடியினுலே வா யுவின்குணமான பரிசமாத்திரத்தையறியும். சட்சு அக்கினியி னம்சமானபடியினுலே அக்கினியின் குணமான ரூபமாத்திரத்தை யறியும் சிங்ஙுவை யப்புவி னம்சமானபடியினுலே அப்புவின் குண

மான ரசமாத்திரத்தை அறியும். ஆக்கிராணம் பிரு துவியினம்சமானபடியினலே பிருதுவியின் குண மான கந்தமாத்திரத்தை யறியும் இப்படி யைந்து மொன்ருெடொன்று கூடாதபடியினலே ஒன்று மற்ருென்றின் குணங்களைக் கிரகிக்கவறியாது. அந் தக்கரணத்தி லைந்துமாத்திரையு மொன்ருய்க் கூடி னதுகொண்டு ஐந்திந்திரியத்தினலும் ஐந்துவிட யத்தையும் அறியும். இந்தச் சாத்தீககுணத்தி லுண் டான வந்தக்கரணமைந்தும் ஞானேந்திரிய மைந் துமாகப் பத்துஞ் சாத்திகாம்சமானபடியினலே ஞானசாதனமாயிற்று.

இன்னம் ஐந்து பூதத்தினுடைய விராசதாம் சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரையெடுத்து ஒன்ருகக்கூட்டிவைத்தது வியாஞதி பஞ்சவாயுக்க ளாயின. இதில் வியானவாயு ஆகாசத்தினம் சமா னபடியினலே ஆகாசத்தைப்போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு வாயுவினம்சமான படியினலே வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதிபரியந்தம் அலையும். அபானவாயு அக்கி னியினம்சமானபடியினலே அக்கினியைப்போலச் சாடராக்கினியாக வுஷ்ணித்துக் கொண்டு குத த்தைப்பற்றி நின்று உண்ட அன்னபாஞதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவினம் சமான படியினலே சரீரநடுவான நாபித்தானத்தினின்று

...டை அன்னபானாதிகளைச் சகல நாடிகளிலும் ...ப்புவைப்போல இழுக்கும். உதானவாயு பிருது ...னம் சமானபடியினாலே கண்டத்தைப்பற்றி நி ... பிருதுவியைப்போலக்கடினமாக நின்று கடை ...ம். இந்தப் பஞ்சவாயுக்களையுமல்லாமல் வாந்தி ...ணிவைக்கின்றவன் நாகனென்றும், இமைத்து ...ழிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத் ...முகின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவிக் ...காள்ளுகின்றவன் தேவதத்தனென்றும், வீங்கு ...க்கின்றவன் தனஞ்சயனென்றும் வேறேயைந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இந்த ...வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியினா ...லே வேறல்ல.

இன்னம் ஆகாசமுதற் பஞ்சபூதங்களினுடை ய விராசதாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்தி ...ர யெடுத்துத் தனித்தனியேவைத்தது வாக்காதி ...ன்மேந்திரியமென்று சொல்லப்படும். இதிலாகாச த்தினிடமாக வாக்குவசனிக்கும். வாயுவினிடமா கப் பாணியிடுதலேற்றல் செய்யும். அக்கினியினிட மாகப்பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் பாயு ரு மலசலாதிகளை வெளியிலே யிழுக்கும். பிருதுவி யினிடமாக வுபத்தஞ் சுகத்தைப் பண்ணும். இந்த வைந்தும் தனித்தனியே யிருந்தது கொண்டு மறு தொழிற் செய்யமாட்டாது. வியானதிவாயு வைந்

து மாத்திரையு மொன்றாய்க் கூடினது கொண்டு கன்மேந்திரிய மைந்தின் வழியினாலு மைந்துதொழிலையுஞ் செய்து முடிக்கின்றது. இந்த வாயுக்களைந்துங் கன்மேந்திரிய மைந்தும் ஆகப்பத்து மிராசதர்ம்சமான படியினாற் கிரியாசாதனமாயின.

அந்தக்கரணம்-ரு-ம், ஞானேந்திரியம்-ரு-ம், வாயுக்கள்-ரு-ம், கன்மேந்திரியம்-ரு-ம், ஆக-உ0-தத்துவமும் சூட்சுமசரீரமென்றுசொல்லப்படும். இந்தச்சூட்சுமசரீரத்தை மாயாப்பிரதிவிம்பராகவிருக்கின்றவீசுரன் அவித்தையாப்பிரதிவிம்பராயிருக்கின்றசீவருக்குப்பேருக்கொவ்வொரு சரீரஞ் சிருட்டித்துக்கொடுத்தார். அப்போது பஞ்சபூதத்தினுடைய சாத்தீகாம்சமு மிராசதாம்சமுஞ் செலவழிந்தன. தாமத குணமாத்திரஞ் சேடித்தது. சூட்சமசரீரம் வாங்காத சீவருக்கெல்லாமின்னமொரு சிருட்டிக்காகட்டுமென்று நிறுத்தினார். இப்படிச் சூட்சும சரீரஞ்சொல்லப்பட்டது.

இனித் தூல பூத வுற்பத்தி சொல்லுகிறோம். அதெங்ஙனெனில் மிஞ்சின தாமதமாயிருக்கின்ற வைந்து பூதத்தையு மொன்றிரண்டாகப் பகுத்து முதற் பாதி யைந்தையு மொன்று நாலாக்கி யிரண்டாம் பாதி யைந்துடனே தன்னம்சத்துடனே கூட்டாமல் மற்ற நாலு பூதத்துடனும் பூதத்திற் கரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது பஞ்

ண மென்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீ
ம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்தி
பரிசரூபரச கந்த மாகிய நான்கு குணமும் வி
ப்பியமானபடியினால் அதிரிசியமாய்ப்போக நிச
மாகிய சப்தமும் வாயுவிலே ரூபரசகந்த மாகி
ன்றுகுணமும் வியாப்பியமானபடியினால் அதி
யமாய்ப்போகக் காரணகுணமாகிய சப்தமும்
குணமாகிய பரிசமும் அக்கினியிலேரசகந்தமா
விரண்டுகுணமும் வியாப்பிய மானபடியினால்
திரிசியமாய்ப்போகக் காரணகுணமாகிய சப்தப்
சமும் நிசகுணமாகிய ரூபமும் அப்புவிலே கந்
குணம் வியாப்பியமானபடியினால் அதிரிசியமாய்
ப்போகக் காரணகுணமாகிய சப்தப்பரிசரூபமும் நிச
குணமாகிய ரசமும் பிருதுவியிலே சப்தப் பரிசரூ
பரசகந்தமுந் தோன்றின.

முன் சூட்சுமபூதத்திலிருந்து சூட்சும சரீரம்
பிறந்தாற்போலப் பஞ்சீகரணம் பண்ணின தூலபூ
தத்தினின்று மாறுதத்துவமாய் நால்வகைப் பிறப்
பாய் எழுவகைச்சாதியா யிருக்கின்ற தூலசரீரங்கள்
பிறந்தன.

இதிலாறுதத்துவமாவ தேதென்றால் சர்மம்,
உதிரம், மாமிசம், சநாயு, அத்தி, மச்சை இந்தஆ
றுவகையுந் தூலசரீரம். நால்வகைத்தோற்றமாவ

தேமதென்றால் சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பிச்சம் ஆகநாலு. மூன்றுசாதி யேதென்றால் இகலோக பரலோக புத்தி இருவகையுங் கொடுக்கி ன்ற மாநுடசரீரம் உத்தமசாதி, பரலோக புத்தி யைமறைத்து இகலோகபுத்திமாத்திரம் அறிகின்ற பசுபட்சிமுதலானவை மத்திமசாதி, இரண்டுலோ கத்துப்புத்தியையும்மறைத்திருக்கின்ற மரங்கொடி செடி அதன்மசாதி. இப்படிப் பிருதுவிதத்துவமா யிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற்போல அப்பு அக்கினி வாயு ஆகாசமென்னப்பட்ட தத்துவங்க ளினும் நிரைநிரையே பிதிர்லோகம் தெய்வலோக ம் யட்சகந்தருவலோகம் சித்தர் லோகங்களினும் நட்சத்திரமாகத்தோற்றுகின்ற சந்திரன்முதலான பிதிர்க்கள் சூரியன்முதலான தேவதைகள் கந்தரு வர் சித்தர் என்னப்பட்டதெல்லா முத்தமசரீரம். காமதேனு, அயிராவதம், அன்னம், கருடன்முத லாயின மத்திமசரீரம். கற்பகவிருட்சம், பாரிசாத முதலாயின அதன்மசரீரம்.

இந்தத்தூலசரீரமே அன்னமயகோசம். சூட் சுமசரீரம் மூன்றுகோசமா யிருக்கும். அதெங்ங னென்னில் பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங்கூ டிப் பிராணமயகோசம், மனதும் ஞானேந்திரியமு ங்கூடி மனோமயகோசம், புத்தியும் ஞானேந்திரிய முங்கூடி விஞ்ஞானமயகோசம், காரணசரீரமே

ஆமயகோசம். இப்படிப்பஞ்சகோசஞ் சொல்

்டன.

ஆறுதத்துவமாயிருக்கின்ற தூலசரீரத்திலே

மசரீர மிருக்கின்றதெப்படி யென்னில் கர்

ரியமான வாக்கும் ஞானேந்திரியமான சிங்

யும் வாயிலிருக்கும். உதானவாயுவும் மனமுங்

த்திலிருக்கும். பிராணவாயுவும் புத்தியும்

யத்தில்இருக்கும். சமானவாயுவுஞ்சித்தமும்

யிலிருக்கும். அபானவாயுவும் பாயுருவுங் குத

இருக்கும். வியானவாயுவும் ஞானேந்திரியா

துவக்கும் அகங்காரமுஞ் சர்வாங்கமும்வியா

ிருக்கும். உச்சியிலேதேயுசுங் கருவிழி நடுவியி

சட்சுயிந்திரியமும் காதுக்குள்ளேசுரோத்திரேந்

ியமும் மூக்குக்குள்ளே ஆக்கிராணஇந்திரியமு

முத்துக்குமேற் றனித்தனியே யிருக்கும். கழு

க்குக்கீழே கைகால் குய்யத்திம்பாணிபாதம் உ

தம் மூன்றும் தனித்தனியேயிருக்கும். இப்படி

தூலசரீரதத்துவம்-கூ-ம், அதிற்குடிபுகுந்த சூட்

சரீரதத்துவம்-உ0-ம், ஆகதத்துவம் - உகூ-ம்,

ந்சபூதத்தின் காரியமானபடியினாலே ஒருமைப்

டாகக் காரியசரீரமென்று சொல்லப்படும்.

காரணசரீரமும்சிதாபாசனும் சாக்கிரத்திலே

ந்தஇருபத்தாறு தத்துவத்துடனே கலந்துநின்ற

பாது விசுவனென்றும் வியவகாரீக சீவனென்று

ஞ் சொல்லப்படும். சொற்பனத்திலே தூலசரீரத்
தைக்கைவிட்டு அந்தக்கரணத்துடனே கூடிநின்ற
போது தைசதனென்றும் பிராதிபாசிக சீவனென்
றும் சொற்பனகற்பிதனென்றுஞ் சொல்லப்படும்.
சுழுத்தியிலே காரியசரீர மிருபத்தாறையுங் கைவிட்
டுக்காரணசரீரத்தைமாத்திரம் பொருந்தி யிருக்கும்
போது பிராக்ஞனென்றும் பாரமார்த்திகசீவனென்
றுஞ்சொல்லப்படும். பிரமசைதன்னியஞ் சாக்கிரத்
துக்குச்சாட்சியா யிருக்கும்போது சிவாத்மாவென்
றுஞ் சொற்பனத்துக்குச் சாட்சியா யிருக்கும்போ
து அந்தராத்மாவென்றுஞ் சுழுத்திக்குச்சாட்சியா
யிருக்கும்போது பரமாத்மாவென்றும் அவத்தாத்
திரயசாட்சியா யிருக்கும்போது ஞானாத்மாவென்
றுங் கூடத்தனென்றுஞ் சொல்லப்படும். இப்படிச்சீ
வனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்தையுஞ்சொல்
லப்பட்டது.

இனி ஈசுரனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்
தையுஞ்சொல்லும்படி. லோககற்பனையாகத் தோற்
றுகின்ற தூலபஞ்சபூதங்களும் அதிற்றோன்றின மூ
ன்றுசாதியா யிருக்கின்ற தூலசரீர சமட்டியுங்கூடி
ஈசுர தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ்சொல்
லப்படும். இதனுடனேகூடிச் சாக்கிராவத்தையை
ப்பொருந்தி யிருக்கின்ற வீசுரன் வைசுவானரனெ
ன்றும் இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்

...ராவென்றுஞ் சொல்லப்படும். சூட்சமபூத...ம் அதிற்றோன்றின சூட்சுமசரீர சமட்டி...ஈசுரசூட்சுமசரீரமென்றும் இரணியகர்ப்ப...மும் சொல்லப்படும். இதனுடனேகூடிசொ...த்தையைப் பொருந்தியிருக்கின்ற வீசுரன் ...ரத்மாவென்றும் இந்த இருவகைக்கும் அதி...சைதன்யம் விஷ்ணுவென்றுஞ் சொல்லப். இந்தத்தூலசூட்சுமவிருவகைக்கும் வாசனை ...கூடினமாயை யீசுரகாரண சரீரமென்றும் ...யாகிருதமென்றுஞ் சொல்லப்படும். இதனு...கூடிச் சுழுத்திபவத்தையைப் பொருந்தியிரு...றவீசுரன் அந்தரியாமியென்றும் இந்த இருவ...கும் அதிட்டான சைதன்யம் உருத்திரனென் ...சொல்லப்படும். சீவன்தன்மூன்றவத்தையிலு ...ன்மூன்றுசரீரமாக இருக்கின்ற விருபத்தேழுத...வத்துடனும் நானென்று கலந்து நிற்கின்றாற் ...ல வீசுரனுந் தம்முடைய மூன்றுசரீரமா யிரு...ற முப்பத்திரண்டு தத்துவத்துடனும் மூன்ற...தையிலுங் கலந்துநிற்பார்.

ஆகையினால் சீவசிதாபாசன் தன்சரீரமாத்திர...கலந்து நிற்பன். ஈசுரன் தம்முடைய சரீரமாகி...சகலசரீரங்களோடுஞ் சகலபிரபஞ்சங்களோடுங் ...ந்து நிற்பர். இந்தவிருவகைக்குஞ் சாட்சியாயி...கின்ற பிரமசைதன்யமுஞ்சகலசரீரத்திலுஞ்சக

லபிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் பத்துத்
திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்குத் தூலசரீரவியவகாரத்துக்கு அன்
னமயமான சட்கோசதத்துவம்-௯, சூட்சுமசரீரத
த்துவம்-௨௦, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிர
மம்-௫, ஆகதத்துவம்-௩௧, சூட்சுமசரீர வியவகாரத்
துக்குசூட்சுமசரீரதத்துவம்-௨௦, சீவன், ஈசுரன், அ
வித்தை, வித்தை, பிரமம்-௫, ஆகத்தத்துவம்-௨௫,
காரணசரீரவியவகாரத்துக்குசீவன், ஈசுரன், அவித்
தை, வித்தை, பிரமம் ஆக-௫, சீவவியவகாரத்துக்கு
சீவன், ஈசுரன், பிரமம்ஆக-௩, சாட்சி வியவகாரத்
துக்குசாட்சி-௧, ஈசுரனுக்குத் தூலசரீர வியவகார
த்துக்குச் சமட்டி அன்னமயகோச தத்துவம்-௯, ச
மட்டி சூட்சுமசரீரதத்துவம்-௨௦, சமட்டி, சீவன் அ
வித்தை-௨, ஈசுரன், வித்தை, பிரமம்-௩, பூதம்-௫, ஆ
கதத்துவம்-௩௯, சூட்சுமசரீர வியவகாரத்துக்கு
ச்சமட்டி சூட்சுமசரீரதத்துவம்-௨௦, சமட்டி சீவன்
அவித்தை-௨, சூட்சுமபூதம்-௫, ஈசுரன், வித்தை, பிர
மம்-௩, ஆகத்தத்துவம்-௩௦, காரணசரீர வியவகார
த்துக்கு, ஈசுரன், வித்தை, பிரமம்-௩, ஈசுரவியவகார
த்துக்கு ஈசுரன் பிரமம்-௨, பிரமவியவகாரத்துக்கு
பிரமம்-௧, இந்திரியவியவகாரத்துக்கு இந்திரியம்௧-
சட்கோசதத்துவம்-௯, கரணம்-௫, வாயு-௫, சீவன்,
ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-௫, ஆகத்தத்து

உ, மனோராச்சிய வியவகாரத்துக்குக்காரணம் ன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆக வம் - ௯௦, இப்படித் தத்துவங்களினுடைய மும் நிலையுஞ்சொல்லப்பட்டன.

னித் தத்துவமொடுங்குகின்றவழி சொல்லு ம். அதெங்ஙன மென்னில் சகல சீவர்களிட இருக்கின்றதூலசரீரங்களும் தனக்காதார லபூதங்களுடனேமடிந்து பூதமாத்திரமா கும். இந்தத்தூலபூதங்களும் பஞ்சீகரணம் தன்மாத்திரையான தாமதகுணபூதங்களா கும். அப்போது கேவல விரணிய கர்ப்பாவத் ன்று சொல்லப்படும். சூட்சுமசரீரம் இருப வமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடையசா குணமும் இராசத குணமுமாக வொடுங்கும் மென்னில் சகல பிராணிகளிடத்திலு மி ற ஆகங்காரமும் ஆக்கிராணமும் உதான முபத்த விந்திரியமும் பிருதுவியி லொடுங் த்தமும் சிங்குவையும் சமானனும் பாயுரு அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபா ம் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும் கும் பிராணனும் பாணியும் வாயுவி லொடுங் தேயுகம் சுரோத்திரமும் வியானனும் வாக்கு சத்தி லொடுங்கும். அப்போது பழையபடி முக்குணபூதங்களாகும், இந்தச் சூட்சுமபூதங்

களும்பிருதுவி அப்புவிற்கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற்சுவறியொடுங்கும். விளக்குப்போலஅக்கினியும் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாசத்திலோய்ந்தொடுங்கும். ஆகாசமும்விட்சேபசத்தியிலொடுங்கும். ஆவரணசத்தியும் விட்சேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தாமதகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலவிரையி லொடுங்கினாற்போல இன்னம்ஒருசிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அதினுண்மையான மூலப்பிரகிருதி யென்றுசொல்லப்பட்ட விந்து நாதத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கிறபெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கதிட்டானசைதன்யமான பிரமசைதன்யமாத்திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொருளொன்றாகக்கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன்வடிவெனக்கண்டுதெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௩௬, அதெங்ஙனென்னில்பூதம்-௫, தூலசரீரதத்துவம்-௬, சூட்சுமசரீரதத்துவம்-௨0, காரணசரீரமானமாயையவித்தை-௨, இதிற்பிரதிவிம்பித்த சீவன்

வம்-உஉ, மனோராச்சிய வியவகாரத்துக்குக்கரணம் ரு, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆக த்தத்துவம் - கo, இப்படித் தத்துவங்களினுடைய தோற்றமும் நிலையுஞ்சொல்லப்பட்டன.

இனித் தத்துவமொடுங்குகின்றவழி சொல்லுகிறோம். அதெங்ஙன மென்னில் சகல சீவர்களிடத்திலே இருக்கின்றதூலசரீரங்களும் தனக்காதாரமான தூலபூதங்களுடனேமடிந்து பூதமாத்திரமாக ஒடுங்கும். இந்தத்தூலபூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரையான தாமதகுணபூதங்களாகமிஞ்சும். அப்போது கேவல விரணிய கர்ப்பாவத்தையென்று சொல்லப்படும். சூட்சுமசரீரம் இருபதுதத்துவமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடையசாத்வீககுணமும் இராசத குணமுமாக வொடுங்கும் அதெங்ஙனெனன்னில் சகல பிராணிகளிடத்திலுமிருக்கின்ற அகங்காரமும் ஆக்கிராணமும் உதானவாயுவுமுபத்த விந்திரியமும் பிருதுவியி லொடுங்கும். சித்தமும் சிங்ஙுவையும் சமானனும் பாயுருவும் அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபானனும் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவி லொடுங்கும். தேயுசும் சுரோத்திரமும் வியானனும் வாக்கும் ஆகாசத்தி லொடுங்கும். அப்போது பழையபடியே முக்குணபூதங்களாகும். இந்தச் சூட்சுமபூதங்

களும்பிருதுவி அப்புவிற்கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற்சுவறியொடுங்கும். விளக்குப்போலஅக்கினியும் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாசத்தி லோய்ந்தொடுங்கும். ஆகாசமும்விட்சேபசத்தியிலொடுங்கும். ஆவரணசத்தியும் விட்சேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தாமதகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலவிரையி லொடுங்கினாற்போல இன்னம்ஒருசிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அதினுண்மையான மூலப்பிரகிருதி யென்றுசொல்லப்பட்ட விந்து தத்துவத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கிறபெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கதிட்டானசைதன்யமான பிரமசைதன்யமாத்திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொருளொன்றாகக்கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன்வடிவெனக்கண்டுதெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௬௯, அதெங்ஙனெனின்பூதம்-ரு, தூலசரீரதத்துவம்-௯, சூட்சுமசரீரதத்துவம்-௨0, காரணசரீரமானமாயைஅவித்தை-௨, இதிற்பிரதிவிம்பித்த சீவன்

ஈசுரன்-உ, இதற்கெல்லாம் அதிட்டானசைதன்யமா
யிருக்கின்ற பிரமம்-க, ஆகத்தத்துவம்-ஙகூ.

இதிற்சீவருக்குச் சமுதாயம். பூதம்-ரு-மாயை
க-மாயாப்பிரதிவிம்பரான ஈசுரன்-க-பிரமம்-க-ஆக
இந்த எட்டுஞ்சகலபிராணிகளுக்குஞ் சமுதாயமாக
வனுபவிக்கப்படும். மற்ற விருபத்தெட்டும் அவன
வனுக்குப் பிறத்தக்காக வனுபவிக்கப்படும். அதெ
ங்ஙனென்னில் பிருதுவிதத்துவம் ஒன்று இறக்கில்
எல்லாருக்கும் ஆதாரமில்லை. மழைமறுக்கில் எல்லா
ருக்குஞ்சலமில்லை. தேயுவில்லாதிருந்தால் பாகமில்
லை. வாடை தென்றல் இல்லாவிட்டால் வாயுவியக்க
மில்லை. ஆகாசமிறக்கில்ஒருவருக்கும் அவகாசமில்
லை. மாயையும் மாயாப்பிரதிவிம்பருமிறக்கிற் சகலச
மயத்துக்குந் தெய்வமில்லை. பிரமமில்லையோ ஒருத்
தருக்குமறிவில்லை. ஆகையால் இந்தஎட்டும் எல்லா
ருக்குஞ் சமுதாயம். பிறத்தக்கெங்ஙனென்னில் ஒரு
த்தனுக்குத் தூலசரீரமிறக்கில் எல்லாருக்குந் தூ
லசரீரம் இறவாதபடியினாலும் சூட்சுமசரீரத்திலொ
ருவனுக்கு அங்கவைகுல்லியம் வந்தால் எல்லாருக்
கும் வாராதபடியினாலும் முத்தராயிருக்கின்ற சுக
ர் வாமதேவர் முதலானபேருக்கு அவித்தையுஞ்சீ
வனு மிறந்துபோயிருக்க மற்றபேருக்கெல்லாம் அ
வித்தையுஞ்சீவனு மிறவாதபடியினாலும் இந்தவிரு

பத்தெட்டுத் தத்துவமும் அவனவனுக்கு பிறத்த க்கென்கின்றதிலே சந்தேகந்தேவையில்லை.

இந்தத்தத்துவம் முப்பத்தாறில் எப்போதுந் தாஞகவே காணப்பட்டதத்துவம்-க, எப்போதுந் தனக்கு அன்னியமாகவே காணப்பட்ட தத்துவம் எ, எப்போதுந்தாஞகவுந் தனக்குஅன்னியமாகவு ம் அனுபவிக்கப்பட்ட தத்துவம்-உஅ, அதெங்ங னென்னில் அவத்தாத்திரய சாட்சியா யிருக்கின்ற பிரமசைதன்னியம் எல்லாவவத்தையிலும் தாஞக வேவிளங்குகையிஞலும் மற்றதத்துவங்கள் போல த்தனக்கு அந்நியமாகக் காணப்படாதபடியிஞலும் பிரமசைதன்ய மொன்றுமே தாஞகவிருக்கப்பட்ட து. பஞ்சபூதம்மாயை மாயாப்பிரதிவிம்பர் ஆகஎழு ம் தன்ரெழிலான வெட்டுக்கொத்துழவு பஞ்சகி ருத்தியம் தசாவதார முதலானதொழில்க ளொருக் காலுந் தன்னுடையதொழிலாகக் காணப்படாதப டியிஞலும் இந்தஎழுதத்துவமுந் தனக்கு அன்னி யமேயல்லாமல் தாஞகமாட்டாது. மற்றஇருபத்தெ ட்டுதத்துவமும் நான் பிராமணன் நான் க்ஷத்திரிய ன் நான்வைசியன் நான்சூத்திரன் நான்பிரமச்சாரி நான்கிருகஸ்தன் நான்வானப்பிரஸ்தன் நான்சந்நி யாசி நான்ஆண்பெண் கறுவல் சிவலை கட்டையன் நெட்டையன் நான்பருத்தேன் இளைத்தேனென்று

தாளுகவழங்குகின்ற தூலசரீரம் ஆறுதத்துவமும் மற்றொருவேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் மாடென்கன் றென்றாற்போல என்சரீரம் பருத்தது இளைத்தது நரைத்தது என்சரீரம்பிறந்து இத்தனைநாள் ஆயிற்றென்று தான் வேறு தூலசரீரம் வேறாக வழங்குகின்றபடியினாலும் நான்கண்டேன் கேட்டேன் தொட்டேன் போகித்தேன் கொடுத்தேன் வாங்கினேன் நடந்தேன் புசித்தேன் சிந்தித்தேன் விச்சயித்தேன் இந்தப்பஞ்சத்துக்குச் சீவித்தேனென்று தாளுகவழங்குகின்ற சூட்சுமசரீரதத்துவம் இருபதும் மற்றொருவேளையிலே தனக்குப்புறம்புபட்டு என்வீடென்னுடைமை யென்றாற்போல என்கண் ணென்கா தென்மூக் கென்னாக்கென்கை யென்காலென்மன மென்புத்தி யென்னகங்காரமென்சித்த மென்பிராணனென்று தான்வேறு அவைகள்வேறாகவழங்குகின்றபடியினாலும் நானறிவேனறியேனென்று தாளுக வழங்குகின்ற வஞ்ஞானமுஞ்சிதாபாசனு மற்றொருவேளையிலே தனக்குப்புறம்புபட்டு என்னஞ்ஞானம்என்சீவனென்றுவழங்குகின்ற படியினாலும் இந்த இருபத்தெட்டுதத்துவமுந் தாளுகவுந்தனக்கன்னியமாகவும் வழங்குகின்றது சித்தம். இப்படிச்சொன்ன குருவைப்பார்த்து சிஷ்யன்கேட்கும்படி இந்த இருபத்தெட்டுதத்துவமுந்தாளுற்சாட்சியைப்போலஒருதன்மை

யாகத் தோற்றவேண்டுமே யல்லாமற் பஞ்சபூதத்தைப்போலத் தனக்கன்னியமாகக்காணக்கணக்கில்லை. இந்தஇருபத்தெட்டுந் தனக்கன்னியமேயானு லெப்போதும்புறம்புபட்டேயிருக்கவேண்டுமல்லாமல் தானாகவழங்கக்கணக்கில்லை. தானுமாய்த் தனக்கு அன்னியமுமா யிருக்குமென்கின்றது இருட்டாகித்தனென்றாற்போலவும் வெள்ளாள தீட்சதனென்றாற்போலவுஞ் சொன்னீர். இதுவிருத்தமென்கின்ற சங்கைக்கு பரமார்த்தமாகத் தானென்கின்றதொருவகையும்அத்தியாசத்தினாலே தானென்கின்றதொருவகையும் ஆக இருவகையுமுண்டு. சாட்சிசைதன்னியத்தைத் தானென்கின்றது பரமார்த்தமல்லாமல்உபசாரமல்ல. தனக்கன்னியமாயிருக்கின்றவிந்த விருபத்தெட்டையுந் தானென்கின்றது சட்டையைக் கள்ளனென்றாற்போலவும் பழுதையைப்பாம்பென்றாற் போலவும் புத்திர தாராதிகளைத் தானென்றாற்போலவும் மயக்கமேயல்லாமல உண்மையல்ல. ஆகையினால் அஞ்ஞானகாலந் தொடங்கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவம்-எ- இப்போது இப்படிக்கொத்த விவேகம்பண்ணினபிற்பாடு தானல்லவென்று காணப்பட்ட தத்துவம்- உஅ, ஆக இந்த முப்பத்தைந்து தத்துவங்களையும் அதற்குச்சொன்ன குணங்குறிகளுடனே கூடக்காண்கின்ற அறிவு கடத்தைப்பார்க்கின்றவன் கடத்

திற்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்க்கின்றதுபோல இந்த முப்பத்தைந்தையுங் காண்கின்றபேரறிவு முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுதானென்றறிந்து அதுதானே பரமசிவனென்று தெளிந்தவனே சிவதரிசனமுடைய சீவன்முத்தனென்று சொல்லப்படுமென்றுத்தரம்.

இப்படிப் பிரமமேதானென்றும் மற்ற முப்பத்தைந்து தத்துவமுந் தனக் கன்னியமென்றும் பிரித்தறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியினாலே புத்திரதாராதிகள் தவிக்கின்றதைத் தான்தவிக்கின்றேனென்கின்ற மூடகரம்போல விந்தஇருபத்தெட்டினுடைய தொழிலையுந் தன்றொழிலென்றுமயங்குகின்றபடியினால் இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாலுங் கட்டுப்பட்டு அந்தக் கன்மத்தின்படியே சனனமரணாதிசமுசாரத்திலே அடிபடுகிறோமென்று மயங்குவன். பிரமசைதன்னியமே தானென்றும் மற்றமுப்பத்தைந்துந் தானல்லவென்றுந் தெளிந்த விவேகிக்கு அகங்காரக்கிரந்தி யற்றபடியினால் இந்த விருபத்தெட்டினுடைய தொழிலையும் நான்செய்யவில்லையென்றும் இந்தவிருபத்தெட்டும் புசிக்கின்றதை நான்புசிக்கவில்லை யென்றுந் திடப்படத்தேறி மயக்கமற்றிருக்கின்றபடியினால் இந்த விருபத்தெட்டி

ஞாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களினின் றும் விடுபட்டுக் கன்மமில்லாதபடியினால் சனனமரணாதி சமுசாரமில்லாமல் முத்தனாகிப் பிரமமாத்திரமாகவே யிருப்பன். இவனைச்சீவன்முத்தனென்றுந் திடப்பிரக்ஞனென்றும் அதிவர்ணாச்சிரமியென்றுங் குணாதீதனென்றும் பகவத் பத்தனென்றும் பிராமணனென்றும் சொல்லுகின்ற இந்த வாறையுஞ் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத்தத்துவத்தை விசாரம்பண்ணி மோட்ச மடையக்கடவர்கள்.

நாஞசிவவாதக்கட்டளை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-திருவேங்கடநாதனார் அருளிச்செய்த

கீதாசாரத்தாலாட்டு.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரை௴

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-திருவேங்கடநாதனார் அருளிச்செய்த

சிதாசாரத்தாலாட்டு.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதினத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல்அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரைமீ

உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ணாயபரப்பிர்மணேநம:

கீதாசாரத்தாலாட்டுப்பிரபந்தம்.

காப்பு.

ஐவகைப்பொருளுநான்கு கரணமுங்குணங்கண்மூன்றுஞ், செய்வினையிரண்டுமொன்றி யாவருந்திகைப்பநின்ற, பொய்யிருளகலஞானப் பொருட்கதிர்விரித்தபுத்தேள், கைவளராழிச்செங்கட் கண்ணனைக்கருத்துள்வைப்பாம்.

ஆக்கியோன்பெயர்-நூல்வந்தவழி
நூற்பெயர்-நூற்பயன்.

வெண்பா.

மாதையர்கோன்வேத நவில்வாய்வேங்கடநாதன்
காதையுறப்பார்த்தனுக்குக் கண்ணனருள்-கீதைக்
கருத்துயர்தாலாட்டாகக் கட்டுரைத்தான்யாருங்
கருத்துயர்தீர்ந்தெய்தக் கதி.

(நூல்.)

சீராரும்பரமார்த்த தெரிசனத்தையருள்செய்யப்,
பேராருந்தேசிகனாய்ப் பெருமானேவந்தவரோ. ( )

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா, லருச்சுனற்குமெய்ஞ்ஞான மனைத்துமுரைசெய்தவரோ. (உ)

உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ணாயபரப்பிர்மணேநம:

கீதாசாரத்தாலாட்டுப்பிரபந்தம்.

காப்பு.

ஐவகைப்பொருளுநான்கு கரணமுங்குணங்கண்மூன்றுஞ், செய்வினையிரண்டுமொன்றி யாவருந்திகைப்பநின்ற, பொய்யிருளகலஞானப் பொருட்கதிர்விரித்தபுத்தேள், கைவளராழிச்செங்கட் கண்ணனைக்கருத்துள்வைப்பாம்.

ஆக்கியோன்பெயர்-நூல்வந்தவழி

நூற்பெயர்-நூற்பயன்.

வெண்பா.

மாதையர்கோன்வேத நவில்வாய்வேங்கடநாதன்
காதையுறப்பார்த்தனுக்குக் கண்ணனருள்-கீதைக்
கருத்துயர்தாலாட்டாகக் கட்டுரைத்தான்யாருங்
கருத்துயர்தீர்ந்தெய்தக் கதி.

(நூல்.)

சீரரும்பரமார்த்த தெரிசனத்தையருள்செய்யப், பேராருந்தேசிகனாய்ப் பெருமானேவந்தவரோ. ( )

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா, லருச்சுனற்குமெய்ஞ்ஞான மனைத்துமுரைசெய்தவரோ. (உ)

சாரதியாய்த் தேர்செலுத்தித் தனஞ்சயனீதா னேயினேப், பாரொனப்பார்த்தேவிசயன் பயந்துமலர்த்தாள்வணங்கி,

(௩)

அமர்க்குவந்தசுற்றத்தா ரனைவரையுங் கொல்வதினு, லெமக்கழியாச் சோகம்விளைந் தெய்துமெனவேவினவ.

(௪)

செஞ்சமரிற் பந்துசனஞ் சேதம்வருமென்றிரங்கி, யஞ்சினபார்த்தன் பயமாங் ககற்றவருளாநோக்கி.

(௫)

சுற்றமறிற் சோகமெனச் சொல்லினைசற்றறிந்தவன்போற், கற்றுணர்ந்தபேரதனாற் கலங்கார்காணென்றவரோ.

(௬)

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்தபேரோனு, மலங்காமனுனிருக்கும் வகையுரையுமெனவினவ.

(௭)

நீயுநானும்புவிமே னிருபர்களுமெய்யுணர்வா, லாயுங்காற்பிறந்திறப்ப தார்க்குமிலையென்றவரோ.

ஈங்கெவர்க்கும்பிறந்திறப்ப தில்லையென்றீ ரிவ்வுலகி, னீங்குபவம்யார்க்கிதனை நிச்சயமாய்ச்சொல்லுமென.

(௯)

இத்தரையிற்பிறந்திறப்ப தெடுத்தவுடற்கடுத்தபொறி, நித்தியமாகியவான்மா னின்சொருபமென்றவரோ.

(௧0)

அங்கமுயிரிந்தியநானன்றிவேறெனைக்காணே, னிங்குயான்வேறுண்டே லெனக்கறியப் புகலுமென. (கக)

மெய்யுயிரிந்தி யங்களல்லால் வேறறியேனெ ன்றவனைப், பையவவையாலறியப் படானுநீயென் றவரோ. (கஉ)

தேகம்வேறாகிலதைச் சேர்ந்ததிவனேதென வே, சோகமேவினைகருமத் தொடர்ச்சியிறுலென்ற வரோ. (கங)

தேகமெடாமுன்கருமச் செயல்வருமாறேதெ னவே, யேகமாமரமும்வித்து மெனுமுறைபோலெ ன்றவரோ. (கச)

காயமுந்தானும்பிறிதேற் கன்மமெவர் செய்த தெனத், தீயவுடற்கலதுகன்மச் செயறனக்கேதெ ன்றவரோ. (கரு)

படர்கருமமுடல்செய்யிற் பலமுறுவதார்க்கெ னவே, யடர்பலமுமுடற்கேயா மறிவார்க்கேதென் றவரோ. (கசு)

வெய்யவினையுடற்கென்றான் மெய்யிங்கேவிழு வான்மா, வையமறநரகசொர்க்க மனுபவிப்ப தே தெனவே. (கஎ)

அநுபவமேயிலையதுவீ ணாரோபிதநிகழ்த்திற் றனுகரணச்செயறனதாய்ச் சார்வதுபோ லென்ற வரோ. (கஅ)

மற்றுடலின்செய்கைதன்மேல் வருமயக்கமே தெனவே, முற்றுணர்வொன்றில்லாத மோகமென்றுசொன்னவரோ. (கக)

அறிவுதேகந் தனக்கோ வான்மாவிற்கோவெனவே, பிறிவுசெய்யிலசித்துடலம் பிரமமறிவென்றவரோ. (உ0)

தேகமசித்தாகிலிந்தச் செயல்வருவதேதெனவே, யேகபரஞ்சோதியின்முன் னிருக்கையிலென்றவரோ. (உக)

இருக்கினுமசேதனத்துக் கிச்செயலுண்டோவெனவே, யுருக்குபடாக்காந்தமுன்னி லூசிநிகரென்றவரோ. (உஉ)

சொன்னசெயலுடற்கானாற் சுகதுக்கமார்க்கெனவே, யன்னசுகதுக்கமுந்தா னவ்வுடற்கேயென்றவரோ. (உங)

சேதனமா மான்மாவைச் சோராத துக்கசுக, மோதுசடமாமுடலை யுற்றிடுமோசொல்லுமென. (உச)

பூதமைந்தோடைந்துயிர்கள் புலன்கள்பத்து மனமுதனுன், கீதிருமெய்யிதின்மனத்துக் கின்பதுன்பமென்றவரோ. (உரு)

இந்தவிருவகைத்தனுவிற்கேதுவேதெனவினவ, முந்தியகாரணமதனுன் மூன்றுதனுவென்றவரோ. (உசா)

மனமறியுந்துக்கசுக வரவென்றீ ரம்மனமும், வினவிலசே தனமலவோ விரித்தெனக்கு விளம்புமென. (உஎ)

அம்மனத்திலான்மா வபேதம்போற்றேன்று தலால், விம்முதுக்க சுகத்தைமன மேவுமென்று சொன்னவரோ. (உஅ)

அந்தமனதுக்கசுக மதனிடத்தினில்லாமல், வந்திலங்குமான்மாவைமருவியதென் சொல்லுமென.

வெய்யகனலின்சூடுமேல் வைத்தசட்டியினூ, டுய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ. (௩0)

சித்தாகுமான்மாவுஞ் செடமாகுஞ் சித்தமுந்தா, ஞெத்தாங்கிரண்டுமொன்றூ யுற்றவகைசாற்றுமென. (௩க)

வல்லிரும்புகனலுடனே மருவியதுபோன்மனமு, மொல்லையிலான்மாவுடனே யுற்றதுகாணென்றவரோ, (௩உ)

உற்றதேதனுலெனவே யுள்ளமவிவேகமுறப், பற்றியதன்மேலுமதன் பண்புவந்ததென்றவரோ.

அடுத்தகுணம்போமோபின் ஞன்மாவைவிட்டெனவே, யெடுத்தசெம்பூநிறம்படிகத் தேறுதல்போலென்றவரோ. (௩௪)

சுத்தபடிகம்போற் சொரூபமாய்த் தானிருக்க, மெத்தவு மாசாமலினம் மேவியதென் சொல்லுமென. (௩டு)

அஞ்ஞதியாம்வாசனையா லடைந்ததாசாமலின,
மனேபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்த
வரோ.
(௩௬)

பந்தமெதுமுத்தியெது பகுத்துரைக்க வேண்
டுமென்றன், சிந்தைதெளியவென்று திருத்தாளி
னைவணங்க.
(௩௭)

தேகாதிதானெனவே சேரபிமானங்கள்பந்த,
மாகாதமானம்விடி லரியமுத்தியென்றவரோ. ()

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வ
கையுந், தவியாமஞானறியத் தயவாகக்கூறுமென.()

மறந்திடு மஞ்ஞானத்தான் மானம்வந்த தஞ்
ஞான, மிறந்துவிடின்மானமும்போ மென்னவுரை
செய்தவரோ.
(௪0)

அந்தமுறையஞ்ஞான மணுகுவதும்போவது
வுஞ், சந்தயமிலாதறியத் தயவாகக்கூறுமென. ()

அஞ்ஞானம் வந்த தனுகியது சொல்வதல்ல,
மெய்ஞ்ஞானத்தாலேவிடுமென் றுரைத்தவரோ. ()

இரவியெதிரடுத்துவந்த விருட்போலவஞ்ஞா
னம், வரவிதியோசோதிதன்பால் வந்தவகை யே
தெனவே.
(௪௩)

அந்தவறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற்,
சந்ததமுமானந்த சாகரங்காணென்றவரோ. (௪௪)

அருதியாம்வாசனையா லடைந்ததாசாமலின, மனேபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்த வரோ. (௩௬)

பந்தமெதுமுத்தியெது பகுத்துரைக்க வேண் டுமென்றன், சிந்தைதெளியவென்று திருத்தாளி னைவணங்க. (௩௭)

தேகாதிதானெனவே சேரபிமானங்கள்பந்த, மாகாதமானம்விடி லரியமுத்தியென்றவரோ. ()

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வ கையுந், தவியாமனறியத் தயவாகக்கூறுமென.()

மறந்திடு மஞ்ஞானத்தான் மானம்வந்த தஞ் ஞான, மிறந்துவிடின்மானமும்போ மென்னவுரை செய்தவரோ. (௪0)

அந்தமுறையஞ்ஞான மணுகுவதும்போவது வுஞ், சந்தயமிலாதறியத் தயவாகக்கூறுமென. ()

அஞ்ஞானம் வந்த தனுதியது சொல்வதல்ல, மெய்ஞ்ஞானத்தாலேவிடுமென் றுரைத்தவரோ. ()

இரவியெதிரடுத்துவந்த விருட்போலவஞ்ஞா னம், வரவிதியோசோதிதன்பால் வந்தவகை யே தெனவே. (௪௩)

அந்தவறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற், சந்ததமுமானந்த சாகரங்காணென்றவரோ. (௪௪)

வேதாந்தத்தாற்குருவான் மெய்ஞ்ஞானம்வந் தவுடன், றீதான துக்கசுகந் தீராதநேதெனவே. ()

பற்றறுமோ துக்கசுகம் பரோட்ச ஞானத்தா லே, யற்றமாமவ்விரண்டு மபரோட்சத் தென்ற வரோ. (சகூ)

பரோட்சமபரோட்சமெது பகுத்துரைக்கவே ண்டுமென்றன், றிரோதமாம் புத்திநன்றாய்த் தெ ளியும்படிக்கெனவே. (சஎ)

பகர்ந்தசத்தஞானம் பரோட்ச மனுபவத்தா, லகம்பிரமமெனு ஞானமபரோட்சமென்றவரோ. ()

தான்பிரமமென்றறிந்துந் தனுவைத் தானெ ன்றபுத்தி, யேன்போகவில்லையதை யெனக்கறியப் புகலுமென. (சகூ)

கேழ்வியினன்மனனத்தாற் கிளர்ந்தயோகங்க ளிஞ, லாழ்பிரமத்தனுபவம்வந் ததுதீருமென்ற வரோ. (ருo)

ஆதியாஞ்சிற்சொருப மாகாததா னினிமேற், சோதிமனனுதியினற்சொருபமாமோவெனவே. ()

எப்போதுஞ்சின்மயந்தா னெனன்மறந்துதே டுவது, செப்புமிடற்றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ. (ருஉ)

தேடியபின்றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொ ருபங், கூடுவனேயானென் குறைதீரச் சொல்லு மென. (ருங)

வந்தவுடல்வேறாயும் வாசனையாற்றானலா
ற், சந்தயமென்றன் சொருபந் தாறுதற் கென்ற
வரோ.
(௫௪)

தனுவைத்தானெனும்பிரமை சத்தஞானத்தி
லறு, தனுபவமெய்ஞ்ஞானத்தா லறும்வகையேது
ரையுமென.
(௫௫)

விளக்குவிளக் கெனுமதனால் வெய்யவிருள்
போய்விடுமோ, துளக்கமிலாவிளக்கேற்றிற் றொலை
யுமிருளென்றவரோ.
(௫௬)

நெடுங்காலமான்மாவை நீங்காதவஞ்ஞானம்,வி
டுங்காலமெந்நாளோ மெய்ஞ்ஞானத்தாலெனவே.

அந்தகாரங்குகையி லாயிரநாளிருந்தாலுஞ்,
செந்தீபங்கண்டவுடன் றீர்வதுபோலென்றவரோ.

கருமயோகந்தவமே காரணமாய்நீங்காம, லரு
மையாய் ஞானம்வந்தோ வஞ்ஞானம் போமென
வே.
(௫௯)

குத்துவெட்டும்படைகளினாற் கூடுமோவிருடு
ரக்க, வுத்தமமாம்ரவியுதித்தாலோடுமிருளென்றவ
ரோ.
(௬0)

அஞ்ஞானவிருடுரக்க வறியாதநல்லகன்ம, மெய்
ஞ்ஞாலந்தனைப்பரிக்கும்விதமெவ்வாறெனவினவ.

கருமமிருவகையாங் காமியநிட்காமியமென்,
றிருவகையினிட்காம மேதுகாரணென்றவரோ. ()

கருமமேகாரணமாய்க்கட்டுரைத்திரிவ்வுலகை,
யொருவும்வகையையெமக்கோதென்றடிபணிய.()

இந்திரசாலம்போலவிவ்வுலகைநம்மிடத்திற்,
றந்திரமாய்த் தோற்றுவித்தோஞ் சத்தியமலவெ
ன்றவரோ. (சுச)

மித்தையெனுஞ் சகத்துநின்பால் விளங்கு
மோவெனவினவச், சுத்திதனிலேரசிதந் தோன்று
தல்போலென்றவரோ. (சுரு)

அயல்வெள்ளிசுத்தியின்மேலாரோபிதங்கூடு,
மியலுள்ளசகமுமுன்வே றிருந்ததுமுண்டோவெ
னவே. (சுசு)

மனமயக்கம்பிடிக்கிலில்லா வத்துவுந்தோன்றி
டுமதுவோ, கனவில்விண்ணிற்றூன்பறக்கக் கண்ட
துபோலென்றவரோ. (சுஎ)

கனவுபோற்பிரபஞ்சமென்றீர்கண்விழித்தாற்
கனவுபொய்யாம், வினவுசகந்தினமுமெய்யாய் வி
ளங்குவதென்சொல்லுமென. (சுஅ)

மெய்யாகவிளங்குவதுமெய்ஞ்ஞானம்வருமள
வும், பொய்யாம்பின்கனவதுபோற் போதம்வரிலெ
ன்றவரோ. (சுகூ)

முன்புகண்டகனவுபொய்யா முழிசாக்கிரம்
போலவென்றீர், பின்புமுத்திசையடைந்தும்
பிரபஞ்சநிற்பதேதெனவே. (எ0)

தெரிந்தவர்க்குத்தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற், பரந்தசகங்காரியத்திற் பயன்ப டாதென்றவரோ.

(எக)

கன்மவினையஞ்ஞானங் கடந்துமதன்காரியமா ம்,புன்மையுறுமெய்யுடனேபோகாததேதெனவே,

வெட்டவிழுமரம்பசந்து விளங்குதல்போற்சி லகால, நட்டகன்மமாய்ந்துமங்கநடித்திடுங்காணெ ன்றவரோ.

(எ௩)

சென்மம்போய்முத்தியினைச் சேரச்சிலரிருக்க த், தொன்மையான்மாப்பலவோ சொரூபம்பகரு மென.

(எ௪)

பிரமமென்றுமீசனென்றும்பெருகுயலசீவனெ ன்று, முறைமயக்கமலதான்மா வொருவனேயென் றவரோ.

(எ௫)

ஏகந்தானான்மா வெனும்வகையேமெய்யானு, லாகந்தோறும்பலவா யமர்ந்ததென்றேசொல்லு மென.

(எ௬)

பலகடத்திற்சலத்தூடு பானுவிம்பந்தோன்று தல்போற், றொலைவில்புத்திதொறுமான்மாத் தோ ன்றுதல்காணென்றவரோ.

(எஎ)

ஆதித்தன்போலான்மா வளவில்புத்திதொறு ந்தோன்றிற், சாதிக்குமுத்தியெவர்தனக்கதனைச்சா ற்றுமென.

(எ௮)

பந்தமுத்திதானுமந்தப் பரந்தபுத்திதனக்கே யா, மந்தவிம்பந்தனக்கிலேயென் றறிவுவரச்சொன் னவரோ. (௭௯)

பரமேகமாயுமதிற் பலசீவனேதெனவே, யொ ருகடலிற்பலகுமிழி யுதிப்பதுபோலென்றவரோ ()

சீவனதுதானென்றுஞ் சேரும்பிரமமென்று, மாவதுவோபேரின்ப மாங்கதெனக்கோதுமென ()

ஏகம்பிரம மிரண்டிலைநீவேறுமல, சோகமுறு ம்பேதமறிற் றேன்றுமின்பமென்றவரோ. (௮௨)

சீவபேதம்போமோசித் தொன்றுமோவென வே, யாவன்மனமறுஞ்சுழுத்தி யவத்தையிற்பாெ ன்றவரோ. (௮௩)

பேதமலவிவ்வுலகம் பிரமமயமென்றறிந்தும், பூதமயமாய்த்தோற்றல் போகாததேதெனவே. ()

கானலைநீரொன்றேடிக் கண்டவர்க்குத்தீர்ந்தபி ன்னும், வானுலவுநீராகி வயங்குதல்போலென்றவ ரோ. (௮௫)

அறிவானுநல்லறிவு மறியப்படும்பொருளும், பிறிவாய்மூன்றாயிருத்தல் பேதமலவோவெனவே.

சொற்பனத்திற்றனித்தொருவன்றேற்றம்வே றில்லையங்கே, கற்பனையாம்பொருளறிவு காண்பவ ன்போலென்றவரோ. (௮௭)

கற்பனையாம்பேதங்கள்காணுமற்போம்வகையை, விற்பனமாய்நானறிய விளம்புமெனவேவணங்க. (

துரியமாம்யோகத்தாற்றூயமனம்லயமாறு,
ரியமூவகைவிகற்ப மழியுமென்றுசொன்னவரோ.(

சிறந்திருக்குமான்மாவுஞ் செகமெல்லாநிறை
ந்திருந்து, மறைந்தெனக்குத்தோன்றாத வகையே
துசொல்லுமென.
(கூ0)

சத்துச்சித்தானந்தந் தான்மூன்றுமதனுட
னே, யொத்துற்றுநாமவுருவஞ்சகமாகி. (கூக

இருக்கையினிற்றோன்றுநிதுமூன்றும்பிரமமெ
ன, மரிக்கில்வரும்பின்னிரண்டு மறிசகமென்றுரை
த்தவரோ.
(கூஉ)

அறிந்துகொள்ஞானத்தாலே யான்மாவையெ
ன்றுரைத்தீர், சிறந்தொளிருமான்மாவுந் கிரிசியமா
மோவெனவே.
(கூந)

முந்தியஞானத்தாலே முதிருமஞ்ஞானந்துற
க்கிற், சிந்தையிலான்மாச்சுயமாய்த் திகழுமென்
றுசொன்னவரோ.
(கூச)

இனியமுத்திச்சுகமிருப்ப தெப்படியென்றேவி
னவ, வனுபவத்திலறிவிடையா னந்தம்போலென்
றவரோ.
(கூரு)

மனலயம்வந்தவரல்துமற்றிலரோமுத்தரென
ச், சனகனைப்போற்சீவன்முத்தர் தாமுமுளரென்ற
வரோ.
(கூசு)

சீவன்முத்தியடைந்தோர்கள் செயலுமவர்தங்
குணமும், நாவுரைக்கும்வாசகமும் நானறியச்சொ
ல்லுமென.
(கூஎ)

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல்பருத்தல்குறைத, லொருங்கலுமெய்க்கென்றதனை யொறுத்திருப்பானொன்றலவரோ. (கூஅ)

பார்ப்பதினுங்கேட்பதினும் பகர்வதினுஞ்செல்வதினு, மேற்பதினுங்கரணதன்ம மெனத்தவிர்ந்தானொன்றலவரோ. (கூகூ)

பசிதாகமுயிர்க்கெனவே பயந்துக்கஞ்சுகங்காமம், வசிகோபமதிக்கெனவே மகிழ்ந்திருப்பானொன்றலவரோ. (க00)

வீடுந்தாரமுமுறவு மேவியென்றுமிருந்தாலு, நீடுந்தாமரையிலைநீர் நிகரொப்பானொன்றலவரோ. ()

பற்றிடுங்காயமுந்தானும் பன்னுளொன்றாயினும்பி, னுற்றபுளியம்பழமுமோடு மொப்பானொன்றலவரோ. (க0உ)

கூறுமுலகியற்கையுடன் கூடினுமெய்ஞ்ஞானம்வந்தோர், சேறும்பிள்ளைப்பூச்சியும்போற் றிரிவார்காணென்றலவரோ. (க0ங)

ததியூடுகடைந்தவெண்ணெய் தான்மோரிற்கிடப்பதுபோல், மதியோடுகூடினும்பின் மயங்கார்காணென்றலவரோ. (க0ச)

அருச்சுனன்றன்பொருட்டாக வனைவருக்கும் ஞானம்வரப், பொருந்தியதேசிகவடிவாம் புண்ணியரேகண்வளரீர். (க0ரு)

ஆயர்குலமாதரனவிலோரைப்புணர்ந்துந், தூ
யபதினாறாயிரவருடந் தோய்ந்திருந்தும். (கOசு)

பரமமுனிவர்முன்னே பரிச்சித்தைத்தீண்டிய
ன்று, பிரமசரியஞ்செலுத்தும் பேரொளியே கண்
வளரீர்.

(கOஎ)

வெண்பா.

ஆதிமூலம்விசயற் காதிமறையின்பொருளை,
யோதியுணர்த்துகின்றவுண்மையிதைக்-காதலுற்று
க், கற்றோருங்கேட்டோருங்காசினியில்வாழ்ந்துமு
த்தி, பெற்றோர்கண் முத்தர்வழிப் பேறு. (கOஅ)

கீதாசாரத்தாலாட்டுப்பிரபந்தம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-தத்துவராயசுவாமிகள் அருளிச்செய்த

சசிவர்ணபோதம்

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரை௴

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

விருத்தாசலபுராணத்திலுள்ள

சசிவர்ணன் சரித்திரம்.

நாரணன் றன்னைநோக்கி நம்பர்தா மருளிச்செய்வார், சீரணிதவத்தினோர்கள் சேவையின் பெருமைகேளீ, ரோணிபாவவெச்ச னென்றொருமறையோன்மைந்தன், ஞாரணிதன்னிற்பாவி சசிவர்ணனென்பான்மன்னோ. (க)

பத்தரையும்மையெம்மைப் பரவுவேதத்தைநீற்றை, மெய்த்தருமத்தைநிந்தை விளம்புவதவன்றன்கல்வி, நித்தலுங்களவுசெய்து நியமந்தன்னடுத்தார்தம்மைக், குத்திரஞ்செய்தானே குலாசாரமாவதம்மா (உ)

மாதரைக்கிளைஞர்தம்மை வாலரைக் கருவைக்கோவை, வேதியர்தம்மைக்கொல்லும் விரதமேவிரதநல்ல, நீதிகளுடையோர்வீட்டி னெருப்பிட்டும் விடங்களிட்டும், பாதகப்பொடிகடூவிப் பறிப்பதேயவன்றன்கேள்வி. (ங)

பத்திரமெழுதியேவற் பணியினர்போலச்சென்று, குத்திரஞ்செய்துகோளுங் குறளையுமுரைத்

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

விருத்தாசலபுராணத்திலுள்ள

சசிவர்ணன் சரித்திரம்.

நாரணன் றன்னைநோக்கி நம்பர்தா மருளிச்செய்வார், சீரணிதவத்திஞேர்கள் சேவையின் பெருமைகேளீ, ரோணிபாவவெச்ச னென்றொருமறையோன்மைந்தன், ஞூரணிதன்னிற்பாவி சசிவர்ணனென்பான்மன்ஞே. (க)

பத்தரையும்மையெம்மைப் பரவுவேதத்தைநீற்றை, மெய்த்தருமத்தைநிந்தை விளம்புவதவன்றன்கல்வி, நித்தலுங்களவுசெய்து நியமந்தன்னடுத்தார்தம்மைக், குத்திரஞ்செய்தரூனே குலாசாரமாவதம்மா (உ)

மாதரைக்கிளைஞர்தம்மை வாலரைக் கருவைக்கோவை, வேதியர்தம்மைக்கொல்லும் விரதமேவிரதநல்ல, நீதிகளுடையோர்வீட்டி னெருப்பிட்டும்விடங்களிட்டும், பாதகப்பொடிகடூவிப் பறிப்பதேயவன்றன்கேள்வி. (ந)

பத்திரமெழுதியேவற் பணியினர்போலச்சென்று, குத்திரஞ்செய்துகோளுங் குறளையுமுரைத்

துமுன்னே, மித்திரர்போலப்பேசி விருந்துண்டுகள வுகொண்டு, சத்துருவாகப்பேசித் தனிப்பழிதோகி ன்றான்.

(ச)

நிறைத்தபொய்யோலைகாட்டி நிலங்களுந் தன முங்கொண்டு, மறைத்தவவேடங்கொண்டு வழிக் களைவந்தியிட்டுப், பறைச்சியைமனைவியாக்கிப் பா தகரிணக்கஞ்செய்து, மிறைச்சியுமீறுங்கள்ளு மீய லுமருந்தாநின்றான்.

(ரு)

சுரர்களாயிவன்றன் வர்க்கஞ் சுவர்க்கத்தைய டைந்தோரெல்லாந், தாமிலாநரகில்வீழ்ந்தார் சசி வர்ணன்செய்தபாவ, முரண்முயலகனும்பேயுநோ யுமாய்மொய்த்துவீழ்ந்தா, னரகமும்வருவனென் றுநடுங்கிடத் தொடங்கிற்றம்மா.

(சா)

வெறுத்திடவொருவன்செய்தபாவங்கண்மிக்க ஞான்று, பொறுக்குமோதெய்வமிம்மை தன்னிலே புடைத்துப்பின்னர், மறுத்திடாநரகில்வாட்டும் பு ண்ணியமலிந்தஞான்று, நிறுத்துமோவிம்மைகாட் டு நெருப்புநீர்மிகுதிபோல.

(எ)

சசிவர்ணன்றந்தையாருந் தரையிடைப் பணி ந்துபோற்றி, யிசையுளதேவபத்த ரொன்னுமாதவ ணைநோக்கி, விசையுளமைந்தன்செய்த வினையெலா ம்விளங்கச்சொன்னார், கசிவுளதேவபத்தர் கருணை யாலுபதேசிப்பார்.

(அ)

அழுங்கியபாவவெச்ச வருண்முதுகுன்றன்மு த்தி, வழங்குவான் வைத்தநந்தி வரையுநாற்காத வெல்லை, செழுந்திருமலையாள்பூசை செய்தசத்திசு ரத்துக், கொழுந்துபட்டயஞர்பூசை கொடுத்தபின் சிருட்டிபெற்ருர். (சு)

பூருவ மகவான்பூசை புரிந்து வானரசஞை, னேருறுமிந்திராணி பூசையாலவனைச் சேர்ந்தாள், தாருகாசுரன்பூசித்துத் தானவர்க்கரசஞை, ஞரு றுவெள்ளிபூசித் தவர்புரோகிதருமாஞர். (க0)

உருவசிபூசையாலே யுயர்மகவானைச்சேர்ந்தா, ணிருமலநந்திவெற்பி னீயுநின்மகனும்போகித், த ருமதானங்கள்செய்து சத்திநாதனையும் போற்றிப், பருவரைதனின் மானந்தி பராயண ரிருப்பார் கே ண்மோ. (கக)

அந்தமாயோகிதன்னை யாஞதசேவைபண்ணி ன், மைந்தஞேயகலுமென்ருர் மறைமுனிவாக்கை நம்பி, யிந்தமால்வரையினண்ணி யீசானகங்கையா டித், தந்தையுமகனுஞ்சத்தித் தலைவனைப்பணிந்து போற்றி. (கஉ)

பரமதேசிகராநந்தி பராயணர்தம்மைப்போற் றி, யுரமுறப்பணிந்துசேவை யுற்றபின்மைந்தன் செய்த, காவுடைப்பவங்கள்சொன்ஞன் கடைக்க

ஞால்யோகிநோக்க, விரவுபாதகங்களெல்லா மேவி டாதகன்றதன்றே.

(கங)

யோகிதன்பூசைக்கேற்ற வுபகரணங்கள் செயதும், போகமார்பசுக்கண்மேய்த்தும் பொற்பதம்பி டித்துநிற்ப, வேகியபவங்களீங்கி வியாதியுநோயு ம்பேயு, மேகியதுடனேபின்னர்ப் பரிகலச்சேடமீ ந்தார்.

(கச)

பரிகலச்சேடங்கொண்டு பதத்தினிற்பூசைசெ ய்தா, னரியநீறியோகிசாத்தி யடியிணைத்தலைமேல் வைத்துத்; தெரிவுறவுபதேசித்தார் திவ்வியஞான ம்பெற்றுத், தரிவுளமுத்திபெற்றான் றந்தையுமுத் திபெற்றான்.

(கரு)

பிதிர்க்களு நரகம்விட்டுப் பெருஞ்சிவலோக ஞ்சேர்ந்தார், கதிர்ச்சசிவர்ணர்காதற் புலைச்சியுங்க தியிற்சேர்ந்தாண், மதித்திருமாலேகேளீர் மாதவர் பெருமைதன்னைத், துதிக்கரிதின்னஞ் சொல்வோ ஞ்சுவகையென்றோருத்திவேசி.

(கசா)

சசிவர்ணன்சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சசிவர்ணபோதம்.

மோகவதைப்பரணியிலுள்ள

கடவுள்வணக்கம்.

மதிபரிதியெரிநீர்கால் வானவனியியமானன்வ
டிவாயெல்லா, வதிபதியாயனைத்துமா யல்லாதவறி
வுருவை யகத்துள்வைப்பாம். (க)

சொல்லாற்றம்மதிவிரகாற் றூயதிதுநீயதிது
வென்னுமாக்க,ளெல்லார்க்குமதுவதுவாயிறையிரு
க்கும்படியேயா யிருக்கவென்றே. (உ)

கடவுள்வணக்கம்முற்றிற்று.

ஷை பரணியில் பேயிரங்கலதிகாரத்

தொடர்புபாடல்.

முடிவுமாதியுமற்றமுழுமுதல்
வடிவமாகிவரும்படியெங்ஙனே. (க)

சொல்லுகோலஞ் சுருதிவிருத்தமோ
வல்லவோவென வன்னையருளுமே. (உ)

அருவனாயினு மன்பர்க்குருவனாய்
வருவனென்பது மாமறைசொல்லுமே. (௩)

பத்தியாம்வலையிற்படும் பார்மிசை
புத்தியாலறியொண்ணுப் புராணனே.
தேவியிப்படிக்கூறத் திருவருள்
பாவியேற்கிலதென்று பதைக்கவே. (ச)
(ரு)
தொடர்புபாடல் முற்றிற்று.

நூல்.

அலகையச்சமறவகவான்களு
முலகின்முத்திபெறும்பரிசோதுவாம்.
புணர்ந்தபாவமெலாம்பரிபூரண (க)
முணர்ந்தஞானிவிழிபடவோடுமே. (உ)

வேறு.

எழிலாருஞானிபுகழென்னைகூறவுயர்வீடிவன் சொல்வழிசெய், தொழிலாளர்சேர்கையதுகேளு முன்னையிதிகாசமொன்றுசொலவே. (ங)

தந்தாபமற்றபரனேவல்செய்த லவனுற்றபே றுதனைமுன், செந்தாமரைக்கண்முதல்வற்கெம்ம ண்ண திருவாய்மலர்ந்திதுவே. (ச)

உவமிப்பின்ஞானிவிழிபட்டுமுன்னை வினைவிட் டுமுத்தியுலகிற், றவமற்றவெய்யவினையேபுரிந்த ச சிவர்ணனெய்துகதையே. (ரு)

வேறு.

வம்புகுவாருளபாதகா-மியாவர்க்குளுமிக்க வனுகுமிவ, னும்புகல்வார்குலமும்மெரிவாய்-நர கம்புகுமாறுநடந்தனனே. (சா)

மலமேவியதீவினையின் வலியான்-மகிழும்பர்பத த்திலிருந்தவிவன், குலமேவியதென்புலவாணர்களு ங்-கொடிதாய்நரகங்குடியேறினரோ. (எ)

மிகமேவியபுண்ணியபாவமெனும் - வினையின் பயன்மேலொருகாலமுறா, திகமேவருமென்பதனு ளனோ-யெல்லாமிவனைச்செறவெய்தினவே.(அ)

தன்புத்திரனையம்விடாமையினும்- றவறுற்ற விவற்பெறுதந்தையுளந், துன்புற்றினியென்னை கொலோபுதல்வன் - றுயர்தீர்வகையென்றுசுழன்ற னனே. (கூ)

ஒன்றாலும்வினைத்துயர்துய்ப்பதலா-லொழிவி க்குமுபாயமுனக்கிலதே, யென்றாலுமறிந்தவனன் புவிடா-திவனைக்கொடுமுன்றனனெங்கணுமே. ()

ஒருமாதவன்மற்றிவன்வேதனைகண்-டொழிவ ற்றுளவொன்றையுளத்துணரும், பரமாகியஞானி கள்கண்ணுறலே-பரமாவிழ்தமென்றுபகர்ந்தனனே

தானந்தமிலாததனைத்தருவான்- சத்தீச்சுரமெ ன்னுமிடந்தனில்வாழ், மானந்திபராயணனென்பவர் நின்-மைந்தர்க்குறுநோய்க்குமருந்தெனவே.(கஉ)

முடியாவுபதேசமிதென்றவனு - முனிவன்பத மெய்திமொழிந்தனனிக், கொடியான்வெருவாதுகு யிற்றியநோய்-கூறற்கரிதாயகொடுந்தொழிலே. ()

ஈங்குன்றிருமுன்பகரும்படியோ- விவனெய்
யதீவினையென்னவெலாம், நீங்கும்படிதன்னனுபூ
பிற-னிகழும்விழிவைத்தனனின்மலனே. (கச

கணியாதபவக் கடுவானதிருக்-கண்வைத்த
ம்விட்டனகாதுகடும், பிணியானையு நல்லபிதா
றைதாள்-பேணிப்பணியென்றுபெயர்ந்தனனே.(

இடனேமுதலாகவுவந்திறையோ - னேவும்
ணிசெய்திவனுஞ்சிலநா, ளுடனேயிவனே திருபே
னிதனக்-குரியானெனவுற்றனனும்பரேடே.(கரு

நன்றாய்முனிதாள் வழிபாடதனு - றுறுவி
மானபிறப்பினைவிட், டொன்றாகியவீடுண ருத்த
ர்கட்-குளசாதனநான்குமுதித்தனவே. (கஎ

முனிவன்றிருமுன்புளதன்குறைதான்- *மொ
ழிவான்சிலவஞ்சலிகுஞ்சியதாய்ப்,பனிவந்திருகண்
கள்பதங்களிலே-பலகால்வலம்வந்துபணிந்தனனே

அருளேவடிவா கியமாமுனிதா- னறியாதவர்
போலவமுங்கலுறும்,பொருளேதெனமைந்தனடுங்
கினனிப்-பொல்லாதபவப்புணரிக்கெனவே. (கக)

வெருவும்பிறவிக்கடல்வித்தரமுன்- வேதாகம
கிதைவிளம்புமதைக், குருவுந்தனதன் பன்மனத்த
ளவிற்-கொளுமாறுதொகுத்திதுகூறிடுமே. (உ0)

---

* மொழிவான் - என்றதற்குப் பொருள் - மொழியும்
பொருட்டு என்று கொள்க.

வேறு.

மரணபவங்களான புனலையுடையது- மதியை விழுங்குகாம வரவுபெரியது, கரணவொழுங்கறுத விடையவினைநுகர்-கணமொடியங்குமீனமிகவுமுக ள்வதே. (உக)

பெருமிதமென்றுகூறும் பெருமையுடையது- பிணிகளெனுங்கெடாத புலவுகமழ்வது, வருமிட ரின்பமான திரைகள்பொருவது- மனமெனும்வஞ்ச ராஜமகரமுறைவதே. (உஉ)

அளவிலகந்தையாமை யபரிமிதமுள-தவாவு நிறைந்தவாழமறியவரியது, களவுநெருங்கு பாரும லையுமுடையது-கலகவிடங்கண்மேவு கிருமி நெளி வதே. (உங)

துகளெனுநன்கிலாதநுரைகடருவது-துறவியி னின்பமானகரையைவிடவகன், மகளிரெனுந்தவா தவலியசுழியது-மறலியுமஞ்சுகோப வடவையெரி வதே. (உச)

வெருவருகின்றபோகமுதலையுடையது-விவிதம னந்தமானதுறையுமறிபவ, ரொருவர்கடந்துபோக விரகிலெழுபவ- வுததி விளம்பயாவருலகிலறிஞரோ.

பொறிவழிசென்று மீளுமவலமதிகொடு-பொ ருசமயங்களாறுமறியவிழுமதி,லறிவழியொன்றிலா தபொருளதெனவுள- வனுபவவங்கமேறுமறிஞராக ல்வரோ. (உரு)

புணரிகடந்துபோகவிரகிலெனமொழி-பொழுதுபுலம்பியாவிபுதல்வனிறைமுன, முணர்வெனும்வங்கமேறுமறிஞரகல்வரென் - றுரையைவழங்கிநாதனுவகையருளவே. (உஎ)

வேறு.

வாழியெனவிறைவனடி தொழுதுவருபவமா, மாழியினையகலுமறிவருளுரைகெனவவரே. (உஅ)

பரவறிவுமபரவறிவென்வுமிருபரிசாந், திரவறிவையறியுமவர்மொழிவர்தெளிவுறவே. (உகூ)

அபரவுணர்வருமறைகண் முதலகிலகலையு, முபரமதறவுதவுமுணர்வுபரவுணர்வே. (௩0)

ஆகமவிதங்களறிவாரபரமறிவார், யோகமொடுறங்குமவரோபரமுணர்ந்தார். (௩க)

புராணமிதிகாசமெவையும்பொருளனைத்தின், பிராணனறியாதுளவிடத்திவைபிதற்றே. (௩உ)

இயலறிவதிசையறிவ தினமறிலதுளதா, மயலறிவதறிவதலவறிவறிவதறிவே. (௩௩)

நவிலுகலையறுபத்துநாலுமறிவாரும், பவலயமதறுசுத்தபரமமறியாரோ. (௩ச)

ஆகவறிவாளரறி வாரிவையனைத்து, மேகவறிவாளரிவையாவுமறியாரோ. (௩ரு)

ஐயறிவறிந்தவை யடங்கினவரேனும், மெய்யறிவிலாதவர்கள்வீடதுபெறாரோ. (௩சா)

மெய்மையறிவல்லதமில் வேறறிவதெல்லாந்,
தம்மையறியுமறிவதேயறிவுதானே. (நஎ)

பூசனையுமதுசகலபொருளுமயிதமையு, மீசனை
யும்வேறதறவறிவதறிவெனவே. (நஅ)

தானெனுமுடம்பது தனைத்தவிரவேறு, யா
னெனுமருத்தமுளவோவருளுமெனவே. (நகூ)

வேறு.

எனதாடைபொன்பூமகன்றையல் பாய்மா-வி
பங்கண்முகங்கால்கை மெய்யென்னவென்றுந், தன
தாயுரைப்பான் வகுத்திந்தவூனைத்-தானென்றயர்த்
துஞ்சொலத்தக்கதன்றே. (ச0)

தாளாகவூராழியார்வென்னில்வீணை-தண்டாக
வன்மார்புதட்டாகமொட்டாம், நாளாமலர்ச்சென்
னிகூந்தற்கொடித்தேர்-நாணுளுமூர்வானில் வேறு
கதாடே. (சக)

கடக்குஞ்சரம்பண்ணியுண்ணின்றொருத்தன்-
கைபாதகன்னங்கண் மெய்போலியக்குங், கிடக்கும்
நடத்தாவிடத்திவ்வுடம்புங்-கிடக்கும்மொருத்தன்
னடத்தாவிடத்தே. (சஉ)

ஒருகூறுமலமாகுமொருகூறுடம்பாகு-மொரு
கூறுமனமாகுமுண்டற்றவன்ன, மிருகூறுநீயாகி
லொருகூறுநீயா - மிழிக்கும்மலஞ்சோரிடப்பட்ட
துடலே. (சந)

இளராதரத்துண்ணுமன்னஞ்சுடக்கை- கிட்டப்பொருதேயிருந்தார்முனிந்தார், தளராதுறுப்பொன்றுமுயிர்போகவன்றே - தழற்பள்ளிமீதேதுயின்முர்சகித்தே. (சச)

நிழற்பாவைகண்ணாடியிற்பாவைகைகா-னிமிர்க்கும்முடக்கும்மிவன்செய்தவெல்லாந், தொழிற்பாலவாமற்றிவ்வுடலஞ்செய்தொழிலுஞ்-சுடர்ஞானவடிவானவன்செய்ததொழிலே. (சரு)

அறிகின்றபொருளென்றுமறிவானில்வேறே-யாணுவிவ்வூனைகநானென்னலாமோ, செறிகின்றபுள்ளல்லவேகூடிவ்வகையே-சடமானவுடனின்னில்வேறென்றுதெளியே. (சசு)

நிலமாகும்வர்க்கென்றனெகிழ்கின்றநீரா - நெருப்பாமிதிற்சுட்டவெல்லாமுமநிலஞ், சலமானபுரையானவானிந்தவுடலஞ்- சடமானவைம்பூதவுருவங்கடாமே. (சஎ)

விழியைப்புமானென்னில்ரவியாதியாலே-விளங்கின்றதல்லால்விளங்காமையாலே, யொழியப்படுங்கன்னமுதனூமுன்ற - னுருக்கண்டகண்டன்னையொப்பாகவுன்னே. (சஅ)

வேறு.

அழனுண்பொருள்களிலுண்பவைமுக்கூறதின்முதற்கூ- றணியென்புநடுக்கூறதுமச்சைசக்கணியாகு, மெழில்கொண்டகடைக்கூறதுவாக்காயெழுமென்றே-யியனான்மறையந்தங்களிசைக்கின்றனதாமே

உண்ணும்புனன்முக்கூறதின் முதற்கூறுவர்நீ
ரா- முதிரம்நடுவிற்கூறு கடைக்கூறுபிராண, னெ
ண்ணுமிதிலிருகூறவை நீயாயிடினன்றே- விறுகின்
றபிராணனன்னது நீயாகுவையிசையே. (ரு0)

பிராணனுமல்லதுஞ்சி லுணர்வின்மையாலஃது
ணரும்புலன்களொழிவாற், பிராணனதென்னின்ம
ன்னையொழியாதுசேனை நகர்சூழ்வலஞ்செய்பொழு
தே. (ருக)

கரணமொடுங்கவாயுநிகழ்வென்கொலென்னி
லுடல்காவலாகுமலதேன், மரணமடைந்ததென்
றுதமர்சுட்டிடாமுன்வளை வாலின்ஞாளிகொளுமே.

இனமுறவெண்ணவுள்ள கரணத்திலொன்றி
தெனலாலிதென்னதெனலான், மனமுனமன்னமெ
ன்றவதனுமல்லமதியல்லவந்தவகையே. (ருஉ)

இடரின்புளதாய்நிலையற்றறிவற்றெண்ணுங்க
ரணங்களிலாயெவரு, மடரும்பிறவிக்கடியென்று
ணரு மகங்காரமுநீயலவென்றறியே. (ருச)

ஐயப்படலோர்பொருணிச்சயமா யறியப்பட
ல்யானெனதென்றுமதஞ், செய்யப்படல்செய்வது
சிந்தனையாஞ்சித்தமதுவன்றெனநீதெளியே (ருரு)

முன்னுகவுடம்பதுசித்தமதே முடிவாகமொ
ழிந்தபொருட்டிரடா, னின்னுகிலநீயறியும்பொரு
ளாய் நிகழ்கின்றதனுலெனநின்மலனே. (ருசு)

உன்னாலறியப்படுமியாவையுமுன்னுருவன்றெனவோதினையொக்குமெனக், கென்னாலறியாதொழியும்பொருளோயானுகுவதென்றனனென்றனுமே.

அறியாப்பொருள்காரணமாயைகுறித். தறியும்பொருள்காரியமாமுலகிந், நெறியாற்றிகழ்நான்மறையந்தமெலாம். நீயன்றெனவோதுநிரந்தரமே()

அறியும்பொருளன்றறியாப்பொருளன். றறிவாகியநீயெனுமப்பொருடான், பொறியின்வழிநின்றறியும்பொருளோ. போதக்கண்விழித்தறியும்பொருளே.

(ருக)

வேதப்பொருடானிதுவேறுசொலும். வினையாவையுமன்றொருவேறுமிலாப், போதப்பொருளந்தமறைக்கணியாம். புனிதப்பொருடத்வமசிப்பொருளே.

(சா0)

வேறு.

நிமலமாம்பரமதுவெனும் பொருணீயெனும்பொருள்சீவனே, யமலமானவிரண்டயிக்கியமசிபதப்பொருளாவதே.

(சாக)

அருமையாகியபிரமமுன்னிலை யாகுமாருயிர்பின்னிலை, யிருமையாயவிரண்டயிக்கியமெய்துமாறெவனென்னவே,

(சாஉ)

உபாதியால்வரு பேதமேயிவர் பேதமன்றுருவுயிரினின், கபாதியாமுடல்போலிறைக்குளகாரணாதிகள்காயமே.

(சாரு)

ஈசன்முற்றறிவான்வியாபியெவைக்குமேதுவி யம்புமா, காசகன்னிருபாதியாவனே காரணுதிகளா வதே. (கூச)

நீதியாலிருபாதிநீக்கிட நீயெனச்சொல்பதத்தி னு, மாதியாகிய தத்பதத்தும சுத்தசுத்தமு ளைத் துமே. (கூரு)

ஆகமுன்றிக ழேழுநானெனல் த்வம்பதத்தில சுத்தமே, சோகமின்றியசாட்சிநானெனல் த்வம்ப தப்பொருள்சுத்தமே. (கூகூ)

அகிலகாரணமாதிநானெனல் தற்பதத்திலசுத் தமே, சகலகாரணசாட்சிநானெனல் தற்பதப்பொ ருள்சுத்தமே. (கூஎ)

செறிந்தகாரணகாரியங்கள் சிதைந்துமேலுறு சித்ததா, யறிந்தவாதனேதானுமற்றதவ் வசிபதப் பொருளாவதே. (கூஅ)

அசுத்தமாகிய திருபதத்தினு முக்கியப்பொரு ளாவதே, விசுத்தமானதிலக்கியப்பொரு ளென்று சொல்லுவர்விமலரே. (கூகூ)

முரண்டசீவ பரங்கடம்முடன் முக்கியப்பொ ருளாவதே, யிரண்டில்வேறறுசிற்சொரூப மிலக்கி யப்பொருளாவதே. (எ0)

ஊக்கியப்பரசீவர்தங்க ளுடம்பிரண்டு மிலக்க ண, வாக்கியப்படி நீக்கினுலொரு வஸ்துவேபரவ ஸ்துவே. (எக)

ஓரில்விட்டதும் விட்டிடாதது முபயமும்மெ
னவுணர்வுளோர், தேரிலக்கணை திரிவிதத்திலிசைப்
பர்மற்றதியம்புவாம். (எஉ)

மஞ்சுகூப்பிடுமென்றல்போலவும் வடபகிரதி
யுள்ளதே, விஞ்சுகோஷமதென்றல்போலவும் விட்
டலக்கணையாவதே. (எங)

சிவலைநின்றது வெள்ளைபோயின தென்றுசெப்
புதல்போலவே, கவலையன்றிவிடாதலக்கணையென்
றுநீகொள்கருத்திலே. (எச)

மேவும்விட்டுவிடாதலக்கணை மெய்மையாதெ
னிலந்தவித், தேவதத்தனெனும் பொருட்படிசிந்
தைசெய்திடுதீரவே. (எரு)

விட்டலக்கணைதனையும்விட்டு விடாதலக்கணை
தனையும்நீ, விட்டுவிட்டுவிடாதலக்கணை யால்விளங்
குவிளங்கவே. (எசு)

போதுமேவிய தேசம்விட்டொரு புருடனைக்
கொளுமாறுபோ, லோதுமீருடல்கண்டுவிட்டதனு
ண்மைகாணவுணர்ந்திடே. (எஎ)

வேறு.

பிரியாவுயிர்காரியமாமுடலும் பிரமத்துறுகா
ரணமாமுடலுங், கரியாகியவாதனையுங்கழியக்காட்
டும்படிகண்டுகொள்கண்ணுறவே. (எஅ)

கரணத்திரணிற்பினுமப்பொருளைக் காணக்கிடையாதவைகையறவே, மரணப்படினும்மதுகண்டுகொளும்வழியில்லையெனும்படிநீமதியே. (எகூ)

எந்தக்கரணங்களுமேவனுவிதில்வாதனையால்விடயங்களொடே, வந்தக்கரணங்கள்பொருந்தல்சுழுவைமாய்தல்சுழுத்தியவத்தையதே. (அ0)

வேறு.

வினவிற்பரத்தையறிவுறுத்றகவத்தைபுலன்வினைமாறியே, நனவிற்சுழுத்திநிலைவரினப்பொருட்டிகழுநலமாகவே. (அக)

திவிதத்தவத்தைசுளையறிவுற்றவத்துரிய நிலைசிவனே, யிவிதத்திலப்புருடனனவுற்றவத்துரிய நிலையீசனே. (அஉ)

அகிலக்கரிப்பரமதுரியப்பொருட்டுரியமதுவாகையே, புகலுற்றதத்வமசியெனுமுப்பதத்தின்முடிபொருளாவதே. (அங)

நிமலப்பொருட்சுருதிநெறியிற்பெறக்கருணைநிதிகூறவே, யமலப்பொருட்பெறுதலருமைத்தெனக்கழறியடிவீழவே. (அச)

தமரக்கலைக்களவு தெரிவற்றதற்பொருள்கடனையிருவா, னமரர்க்களப்பரியபத நற்புனற்கொடு செய்தபிடேகமே. (அரு)

பவளத்தில்வைத்தவமிர்தினின்மிச்சிலிட்டினியபரிவோடுமா, தவளப்பொடிக்க வசமெனவிட்டுடற்பகைகடலைசாயவே. (அசு)

உதகத்துடற்பொருளொ டுயிர்கைக்கொடுச்சிமிசையொருபோதொடே,பதகத்தலத்தைவிடவிருகைத்தலத்தொடிருபதமேவியே. (அஎ)

ஒழியப்புலக்கணுபநிடதப்பொருட்டெரியவுளஞானமாம், விழியைக்கொடுத்துமொழி யெனமுப்பதப்பொருளும்வெளியாகவே. (அஅ)

நனைவைத்துவக்கிமுடிதுரியத்தைமுற்றவிறைநவினீதியே, மனவர்க்கமற்றவனுபவமுற்றசிற்கனவலியோதுமே. (அகூ)

வேறு.

புரணமாகவேபுறம்புளபுலன்களுமநந்தக், கரணமியாவையும்வழங்கிடம்நனவெனக்கண்டேன்.

புரணமாகியபுறம்புளபுலன்களுமநந்தக், கரணமியாவையும்வழங்கிடங்கனவெனக்கண்டேன். ()

மரணமாகியதிசையிதுவெனும்படிமறுதி
கரணமியாவையுமிறந்துளசுழுத்தியுங்கண்டேன். ()

எஞ்சலின்றியெக்கரணமுமிறந்திருண்டிருந்த
துஞ்சலங்குணர்போதமாந்துரியமுங்கண்டேன். ()

துரியமாகியபோதமோர்துளக்கமற்றனைத்தின்
கரியதாயிருந்திடம்பரனனவெனக்கண்டேன். ()

புணர்ந்தவிச்சகத்தொழித்துணர்போதமாந்த னையே, வுணர்ந்தமற்றதுபரன்கலையெனும்படியுண ர்ந்தேன். (கூரு)

சான்றுசாக்கிய மிறந்திடத்தானிருந் தமையு ந், தோன்றுரு விடம்பரன்சுழுத்தியதெனத்துணிந் தேன். (கூசா)

மரித்ததென்றுணர்ந்துரைத்ததும்மரித்திடந்த னிலே, தெரித்தபோதமேததுபரன்றுரியமாய்த்தெ ளிந்தேன். (கூஎ)

இறையெனும்பொருட்டுரியமேயென்னையாண் டவனே, மறையினந்தநற்பதப்பொருணனவெனம தித்தேன். (கூஅ)

பண்டைவிச்சுவவாதனைப்பழுதுபோய்முழுதுங் கண்டகண்ணதேயாகியகனவதுங்கண்டேன். ()

காட்சியானவையுங்கண்ணதாயக்கணுங்கரைந்த மாட்சியாகியவகோசரமுறக்கமாய்மதித்தேன். ()

அருந்தவாமறையந்தமாமகோசரந்தனினீ யிருந்தவாறறிவித்தவாறெங்ஙனமிசைப்பேன். ()

எம்பிரானிடந்தொறுமிடந்தொறுமதுவதுவாய்த் தம்பிரானடஞ்செயும்வகைசாற்றுமாறறியேன். ()

ஆவியேயடியேன்செய்கைம்மாறனக்கென்னெ னிற், பாவியேனதுதானுமுன்னுடையதாம்பண் டே. (கoக)

ஆவல்செய்தெனதாக்கையுள்ளளவுநின்னடியார்க்
கேவல்செய்வதேயன்றிமற்றொன்றுநானறியேன். ()
இறவிலெப்பதமும்பெறவேண்டிலேனென்றும்
பிறவிவேண்டுவனின்றிருப்பணிசெயப்பெறினே. ()

வேறு.

என்றுபலகால்விழுமெழுந்தொழுமழும்புரியு மென்னையினியா, னின்றுபலவாகவுரைசெய்தவவ னன்பினொடுநெஞ்சுருகியே. (௧0௬)

எட்டிலறிவின்றியிறைதன்னிலறிவின்றியிவ்வு டம்பினுடனே, வீட்டிலுறைவானையினிவீடுபெறு மென்பதுவிளம்புகிலமே. (௧0௭)

வஞ்சவலியானரகில்வீழ்பிதிரரங்நரகுபாழ்பட மிகா, விஞ்சைவலியாலடையவேறினர்சுராதிபர்க ண்மேலுலகமே. (௧0௮)

தேவருமனித்தருமிவன்றொழில்வியந்துரைசெ யப்படுவதோ, மூவரும்வணங்கிமுடியாலவனதேவ ல்செயமுந்துறுவரோ. (௧0௯)

